பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 05

ஞாயிற்றுக்கிழமை
01 டிசெம்பர் 2024

கார்த்திகை 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

சீரற்றகாலநிலை; தொற்றுநோய் பரவும் » 03

உள்ளூராட்சித் தேர்தல் புதிதாக வேட்புமனு » 07

முப்படைகளும் குறைக்கப்படும் » 02

இராணுவ முகாம்களை அகற்றி

## வடக்கின் கட்டுப்பாட்டை இழக்கின்றது அரசாங்கம்



பிரதான எதிர்க்கட்சியான சஜித் தரப்பு கண்டுபிடிப்பு

கொழும்பு, டிசெப்பர் 1

வடக்கில் இராணுவ முகாம்கள் தொடர்ச்சியாக அகற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் வடக்குத் தொடர்பான பாதுகாப்புக் கட்டுப்பாட்டை அரசாங்கம் இழந்து வருகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

☞ 15





## பெங்கால் புயல் மூர்க்கம்; தத்தளிக்கிறது தமிழகம்!

சென்னை, டிசெ. 1

வங்கக் கடலில் கடந்த சில நாள்களாக நகர்ந்து கொண்டிருந்த பெங்கால் புயல் நேற்றுப் பின்னிரவு புதுச்சேரி, மற்றும் தமிழகத்தின் எல்லைப் பகுதிகள் வழியாகக் கரையைக் கடக்க ஆரம்பித்தது. புயல் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம்,

☞ 15

## யானை தாக்கியதால் கடற்படை அதிகாரி சாவு

வவுனியா, டிசெ. 1

வவுனியாவுக்கு அருகிலுள்ள பூனாவை கடற்படை முகாமில் பணியாற்றும் கடற்படை அதிகாரியொருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார். நிட்டம்புவ பகுதியைச் சேர்ந்த 47 வயதான கட்டளை

☞ 15

## தவறான முடிவெடுத்து 2 பெண்கள் உயிரிழப்பு

வவுனியா, டிசெ. 1

தவறான முடிவெடுத்து இரண்டு இளம் குடும்பப் பெண்கள் உயிரிழந்துள்ளனர். வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்

☞ 15

யாழ்ப்பாணம் மாவட்ட

## ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அமைச்சர் சந்திரசேகர் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

☞ 15



மாவீரர் தினம் தொடர்பில்

## இனவாதக் கருத்துகளை வெளியிட்டால் நடவடிக்கை

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

புலிகளை நினைவு கூர்ந்திருந்தால் மட்டுமல்ல, மாவீரர்தினம் தொடர்பில் திரிவுபடுத்தப்பட்ட இனவாதக் கருத்துகளை வெளியிட்டாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் அமைப்பு தடை

☞ 15

## டெங்கு 45,448

கொழும்பு, டிசெ. 1

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்

☞ 15



முச்சந்தி முராரி

‘அங்கால பெங்கால் மூர்க்கம், இஞ்சால டெங்கால தாக்கம்’

## மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பு

பெற்றோல் ரூ.2 குறைப்பு

கொழும்பு, டிசெ. 1


எரிபொருள்களின் மாதாந்த விலைத் திருத்தங்கள் நேற்று நடைமுறைக்கு வந்துள்ளன. மண்ணெண்ணெய் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலையாக 188 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

☞ 15

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறைக்கப்படும் முப்படையினர்

### இராணுவப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, டிசெ. 1

**முப்படையினரினது எண்ணிக்கையை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் ராசிக குமார தெரிவித்துள்ளார்.**

அதன்படி இராணுவத்தினரின் எண்ணிக்கையை ஒரு இலட்சமாகவும், கடற்படையினரின் எண்ணிக்கையை 30 ஆயிரமாகவும் விமானப்படை யினரின் எண்ணிக்கையை 20 ஆயிரமாகவும் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி செயலக சட்டத்துறை பணிப்பாளர் விஜய பண்டார, "படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக இதுவரை எதுவித கலந்துரையாடலும் இடம்பெறவில்லையெனவும், படையினரின் எண்ணிக்கையை குறைப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஏதாவது இடம்பெற்றால் நாங்கள் முதலில் அமைச்சரவைக்கு அறிவிப்போம்" என்றும் தெரிவித்துள்ளார். (ச-6)



# கட்சியை செப்பனிடுக

### ஹிருணிகா கோரிக்கை

கொழும்பு, டிசெ. 1

ஐக்கிய மக்கள் சக்தி மறுசீரமைக்கப்படவேண்டும் என்று அந்தக் கட்சியின் மகளிர் அணி தேசிய அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அநுரகுமார திஸாநாயக்க தலைமைத்துவத்தை ஏற்ற பின்னரும் ஜே.வி.பி. தோல்வி கண்டது. எனினும், மாற்றங்களை அநுர ஏற்படுத்தினார். ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியாக மாறியது. தனது நடை, உடை என எல்லாவிதிலும் அநுர மாறினார். ஜே.வி.பியின் கொள்கைகளும் தகர்த்தப்பட்டன. இறுதியில் இன்று ஆட்சியைக் கைப்பிடித்துள்ளனர். ஜே.வி.பி. யாகவே இருந்திருந்தால் அவர்களால் இன்று ஆட்சியைப் பிடித்திருக்கமுடியாது.

அதிகாரத்தைப் பெறுவதுதான் அரசியல்வாதிகளின் இலக்காக இருக்கவேண்டும். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியும் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

தலைமைப்பதவியில் சஜித் இருக்கட்டும். இரண்டாம் தலைமைத்துவமொன்று உருவாக்கப்படவேண்டும். உண்மையான சஜித் யார் என்பதை மக்கள் மயப்படுத்தவேண்டும் - என்றார். (ச-44)

### மைத்திரி கொலைச்சதி

## சந்தேகநபர்களுக்கு பிணை நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 1

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2008 ஆம் ஆண்டு விவசாய அமைச்சராக இருந்தபோது கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சந்தேகநபர்களுக்குப் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், சந்தேகநபர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் எனவே அவர்களைப் பிணையில் விடுதலை செய்யுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி இவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு பிணை வழங்க முடியாது எனத் தெரிவித்தார்.

செல்வராசா கிருபாகரன், மொறிஸ் அல்லது கொஸ்தா, தம்பையா பிரகாஷ் அல்லது தனுஷ் ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச-6)

## 17 லட்சத்தைக் கடந்த சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, டிசெ. 1

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 17,76,889 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டுத் தெரிவித்துள்ளது.

அதன்படி, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதுடன், அந்த எண்ணிக்கை 3 லட்சத்து 57ஆயிரத்து 279 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, ரஷ்யா, ஜேர்மனி , பிரித்தானியா, அவுஸ்திரேலியா , சீனா மற்றும் பிரான்ஸ்ஆகிய நாடுகளிலிருந்தும் அதிக சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்குள் பிரவேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## லாப்ஸ் எரிவாயுவின் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு

கொழும்பு, டிசெ, 1

இலங்கையில் நிலவும் லாப்ஸ் சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு விரைவில் நிவர்த்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்தின் கப்பலுக்கு திரவ வாயு பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

இதன்படி, லாப்ஸ் சமையல் எரிவாயு நிறுவனத்துக்கு 3,170 மெற்றிக் தொன் திரவ எரிவாயு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த நிலையில் லாப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு விரைவில் நிவர்த்திக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது

கொழும்பு, டிசெ, 1

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகரை இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

குறித்த பொலிஸ் அதிகாரி 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான குளிரூட்டியை இலஞ்சமாக கேட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)



## விஜித ஹேரத்துக்கு அழைப்பாணை

கொழும்பு, டிசெ. 1

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தேசிய லொத்தர் சபையின் முன்னாள் தலைவர் சந்திரவன்ச பத்திராஜவுக்கு எதிராக முறையற்ற வகையில் ஊக்குவிப்புகளை வழங்கிய குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கிலேயே வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த வழக்கு 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலையால் தொற்றுநோய் அபாயம்

## சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை

**கொழும்பு, டிசெ,1**

**சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**

உணவு மற்றும் பானங்களை கொள்வனவு செய்தல் மற்றும் உட்கொள்ளலின் போது பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜி.விஜயசூரிய பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை,வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 45 ஆயிரத்து 448 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், மேல் மாகாணத்தில் மாத்திரம் 19,487 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)





# தாழிறங்கிய வீதிகள் தற்காலிக சீரமைப்பு!

யாழ்ப்பாணம், டிசெ, 1

சீரற்ற காலநிலை காரணமாக வடமராட்சியில் இரு இடங்களில் தாழிறங்கிய கடற்கரை வீதிகள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை துறைமுகப் பகுதி மற்றும் சக்கோட்டை சவேரியார் தேவாலயத்துக்கு முன்பான பகுதி என்பனவற்றில் அணை உடைப்பெடுத்து கடலரிப்பு ஏற்பட்டதனால் வீதிகள் தாழிறங்கின.

இந்த நிலையில் குறித்த வீதிகளிலுள்ள பள்ளங்களுக்கு கருங்கற்கள் கொட்டப்பட்டு தற்காலிகமாக சீர்செய்யப்பட்டு பாதுகாப்பு தடுப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (ச-25,100)

# சுகாதாரமற்ற உணவகங்களின் உரிமையாளர்களுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்ட நெல்லியடியிலுள்ள 8 உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு 36 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொது சுகாதார பரிசோதகர்கள் நெல்லியடி நகரப் பகுதியில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சுகாதார விதிமுறைகளை பின்பற்றாத உணவு கையாளும் நிலையங்கள் அடையாளம் காணப்பட்டன.

இதனையடுத்து உரிமையாளர்களுக்கு எதிராக 12 பிரிவுகளாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம்வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ச-25, 9)

# ஆலயத்தில் கொள்ளை; சந்தேகநபர் சிக்கினார்

யாழ்ப்பாணம், டிசெ. 1

கைதடி கௌரி அம்மன் ஆலயத்துக்குள் பட்டப்பகலில் புகுந்து பூசகரை கத்தியால் காயப்படுத்தி பணம், நகை என்பவற்றை கொள்ளையடித்த சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆலயத்துக்குள் கடந்த புதன்கிழமை ஆலய மடப்பள்ளியில் மடப்பள்ளிக்குள் புகுந்த இருவர் பூசகரை கத்தியால் தாக்கிவிட்டு பூசாரியிடமிருந்த நகை மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றனர்.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் கிடைத்த தகவலுக்கமைய குறித்த சந்தேகநபர்கள் இருவரில் ஒருவரை பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் வைத்து பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் இயங்கும் காங்கேசன்துறை விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

மேலதிக சட்டநடவடிக்கைக்காக சந்தேகநபர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ச-100)

'போர்ட் சிற்றி'யில்

# 2000 டொலருக்கு பொருள் வாங்கலாம்

கொழும்பு, டிசெ, 1

கொழும்பு போர்ட் சிற்றியில் அமைந்துள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் வெளிநாட்டிலிருந்து திரும்பும் இலங்கையர்கள் 2 ஆயிரம் டொலர் பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்ய முடியும் என அரசு அறிவித்துள்ளது.

வெளிநாட்டு விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவோர் நாடு திரும்பிய நான்கு நாள்களுக்குள் இங்கு பொருள்களை கொள்வனவு செய்யலாமென போர்ட் சிற்றி பற்றிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.


இங்குள்ள விற்பனை நிலையங்கள் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 6)

# விழிப்புணர்வு செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 1

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவினரால் சமூக பொருளாதார மேம்பாட்டு உள்ளூர் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு, பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பிரதேச செயலர் ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட விதாதா வள நிலைய அலுவலர் த.முரளிதரன், மாவட்ட அலுவலர் செல்வி க. வாகினி ஆகியோர் கலந்து கொள்வர். (ச-25,9)





# டென்மார்க்கில் மாவீரர் நாள்

யாழ்ப்பாணம், டிசெ. 1

டென்மார்க்கில் கேர்ணிங் மற்றும் கொல்பேக் நகரங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் கொண்டாடப்பட்டன.

பொதுச்சுடர் ஏற்றலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தமிழீழத் தேசியத்தலைவரின் 2008ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரை ஒளிபரப்பப்பட்டதை தொடர்ந்து மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் டென்மார்க் நாடாளுமன்ற மற்றும் நகரசபை உறுப்பினர்களின் உரைகள், டெனிஸ் தமிழ் அமைப்புகளின் ஒன்றியம் மற்றும் டென்மார்க் மாலதி தமிழ்க் கலைக்கூட உறுப்பினர்களின் சிறப்புரைகள், மாலதி தமிழ்க் கலைக்கூட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கவிதைகள், பேச்சுகள், பாடல்கள், கவிதா நிகழ்வு மற்றும் எழுச்சி நடனங்கள் என்பன இடம்பெற்றன. (ச-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வவுனியாவில்

# 4 குழந்தைகள் ஒரே சூலில் பிரசவம்

யாழ்ப்பாணம், டிசெ. 1
வவுனியா மருத்துவமனையில் முதன்முறையாக ஒரே சூலில் உருவாகிய 4 குழந்தைகள் பிறந்துள்ளன. பதவியாவைச் சேர்ந்த பெண்ணொருவரே இவ்வாறு 4 குழந்தைகளை பிரசவித்துள்ளார்.
வவுனியா மருத்துவமனையில் நான்கு குழந்தைகள் ஒரே பிரசவத்தில் பிரசவிக்கப்படுவது இதுவே முதன் முறையாகும். தாயாரும் குழந்தைகளும் நலமாக வுள்ளதுடன், நான்கு குழந்தைகளும் சிறப்பு குழந்தை நலப்பிரிவில்வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றன என்றும் மருத்துவமனை வட்டாரம் தெரிவித்தது. (ச-110)

# சீரற்ற காலநிலையால் காற்றின் தரம் மாற்றம்

கொழும்பு, டிசெ. 1
**கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று சனிக்கிழமை காற்றின் தரக் குறியீடு 92 முதல் 120 வரை இருந்தது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.**

இதன் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் ஆரோக்கியமற்ற நிலைக்கு உயரலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதனால் சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம் எனவும் அவ்வாறான சிரமங்கள் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனையை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நிவாரணங்களை துரிதப்படுத்துக!

யாழ்ப்பாணம், டிசெ. 1
வெள்ளத்தினால் பேரிடரைச் சந்தித்துள்ள வடக்கு - கிழக்கு மக்களுக்கு உடனடி உதவிகளும், நிவாரணமும் வழங்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருப்பது பாராட்டுக்குரியது. எனினும் வடக்குக் கிழக்கில் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ள நிலையில் அவர்களுக்கு விரைந்து நிவாரணங்களை விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
சீரற்ற காலநிலையால் வடக்குக் கிழக்கில் இலட்சக்கணக்கான மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் தொற்று நோய்த் தாக்கத்துக்கு உட்படக் கூடிய அபாயமும் உள்ளது. இவர்களுக்கான உடனடி உதவிகள் வழங்கப்படவேண்டும்.
ஆகவே முறையாக மதிப்பீடு செய்து உரிய நிவாரணம் வழங்கப்படுவதோடு எதிர்வரும் காலத்தில் இவ்வாறான இடர்கள் ஏற்படும்போது மக்கள் பாதிப்புறாத வண்ணம் இருப்பதற்குரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்வதை உறுதிப் படுத்தவேண்டும் - என்றார். (ச-25-214)

# பேசாலை வெற்றி அன்னை வருடாந்த பெருவிழா



மன்னார் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய வருடாந்த பெருவிழா, பேசாலை பங்கு தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது . கொடியேற்ற நிகழ்வில், மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி றொக்சன் குரூஸ் அடிகளார், மன்னார் வாழ்வோதயம் இயக்குனர் அருட்பணி க.அருள்ராஜ் குரூஸ் அடிகளார் மற்றும் பேசாலை உதவி பங்கு தந்தை அருட்பணி பியோ அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,60)

# நூல் வெளியீடு திகதி மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 1
கிரிசாந்தின் 'வாழ்க்கைக்குத் திரும்புதல்' எனும் கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வு, வெள்ள இடர் கால நிலைமைகளைக் கருத்தில் கொண்டு திகதி மாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற இருந்த நூல் வெளியீடு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் மு.ப. 10 மணிக்கு இடம் பெறும். அனைத்து நண்பர்கள் மற்றும் இலக்கிய வாசகர்களையும் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)

# சாவ. நகரசபை வளாகத்தில் பசு மாடு இறைச்சியாக்கல்!

## அலுவலர் உட்பட இருவர் கைது





யாழ்ப்பாணம், டிசெ. 1
அயலவரின் பசு மாட்டைத் திருடி சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொதுநூலகத்தில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொதுநூலக ஊழியர் உட்பட்ட இருவர் அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். கடந்த புதன்கிழமை நுணாவில் பொதுநூலகத்துக்கு அருகிலுள்ள காணியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட பசு மாடு காணாமல் போயுள்ளது.
பசுவின் உரிமையாளரும் அந்தப் பகுதி இளைஞர்களும் தேடுதல் நடத்தியபோது நூலக மதிலுக்கு அருகில் பசுமாட்டின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து நூலகத்துக்குள் நுழைந்து பார்த்த பொழுது நூலக குளியலறைக்குள் வைத்து பசுவை இறைச்சியாக்கிய இரத்தக்கறைகள் காணப்பட்டுள்ளன. அதனையடுத்து சந்தேகமடைந்த இளைஞர்கள் இணைந்து அங்கிருந்த அலுவலரை விசாரித்தபோது இன்னொருவருடன் இணைந்து கடமை நேரத்தில் பசுவை இறைச்சியாக்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். இருவரையும் இளைஞர்கள் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.
சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த சாவகச்சேரி பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-100)

# பல்கலைக்கழக விடுதிகளிலுள்ள மாணவர்களுக்கு உதவிடுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 1
சீரற்ற காலநிலை காரணமாக பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ள நிலையில் வீடுகளுக்குத் திரும்ப முடியாது விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு உதவ நலன்விரும்பிமுன்வாருங்கள் என்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. அண்மைய சில நாள்களாக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நீடித்த சீரற்ற காலநிலையால் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஏராளமானவர்கள் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன் 27,28,29 ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த பரீட்சைகள் யாவும் கலைப்பீடாதிபதியால் பிற்போடபட்டுள்ளன.
இந்த நிலையில் பல்கலைக்கழகத்தில் போதிய விடுதி வசதிகள் இன்மையினாலும் வெள்ளம் காரணமாகவும் பல மாணவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களுக்கு புலத்தில் உள்ளவர்கள் உதவ முன்வருவதற்கு எதிர்பார்க்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-125, 20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி வருமானம் ஒக்ரோபரில் உயர்வு

கொழும்பு, டிசெ, 1

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 24.8 சதவீதம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த அதிகரிப்பு 1,158 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.


கைத்தொழில் மற்றும் விவசாய உற்பத்திகள் என்பவற்றின் முதன்மை ஏற்றுமதியின் காரணமாக இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

இருப்பினும் இரத்தினக்கற்கள், வைரங்கள், ஆபரணங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள் என்பவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் விவசாயத் துறையின் ஏற்றுமதி அதிகரிப்பில், தேயிலை, வாசனைத் திரவியங்கள், தெங்கு சார் உற்பத்திகள் என்பனவும் தாக்கம் செலுத்தியுள்ளதாக மத்தியவங்கி குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# இப்படி வீதியிருந்தால் எப்படிப் பயணிப்பது?

## பயணிகள் ஆதங்கம்




**யாழ்ப்பாணம், டிசெ, 1**

**மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது. இந்த வீதியால் துவிச்சக்கர வண்டி கூட பயணிக்க முடியாதுள்ளது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

கடந்த சில தினங்களாக பெய்த அடைமழையையடுத்து குறித்த வீதியில் மேலும் பல குழிகள் ஏற்பட்டுள்ளன. இந்த வீதியை சீரமைத்துத்தருமாறு, ஆகக் குறைந்தது தார்க்கலவையேனும் இட்டு செப்பனிடுமாறு மழைக்கு முன்னரே பலமுறை கோரிக்கை விடுத்தபோதிலும் எவரும் எட்டியும் பார்க்கவில்லை.

இந்த வீதியிலிருந்து பொன்னாலைச் சந்தி வரை ஆங்காங்கே பல குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் வீதியால் பயணிப்போர் விபத்துகளிலும் சிக்குகின்றனர். எனவே அடுத்த மழை ஆரம்பமாவதற்கு முன்பு தார்க்கலவையேனும் இட்டு குறித்த வீதியை செப்பனிடுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-125)



கொலைச் சம்பவம்

# அறுவருக்கு மரணதண்டனை

கொழும்பு, டிசெ, 1

கொழும்பு நாரஹேன்பிட்டியில் கடந்த 2016ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 பேரும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு, கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

2016இல் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் மரண வீடொன்றில் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொலை செய்யப்பட்டு, மற்றுமொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 பேரும், நீண்டகாலவிசாரணைகளின் பின்னர், குற்றவாளி என நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து, நீதிமன்றம் இந்த மரண தண்டனையை விதித்துள்ளது. (ச-இ)

# ஓ.எம்.பி. அலுவலகத்துக்கு விண்ணப்பங்கள் கோரல்

காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற்போனவர்கள் தொடர்பான அலுவலக சட்ட விதிகளின்படி இந்த விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் நாடாளுமன்ற இணையத்தளமான 'www.parliament.lk' இல் உள்ள தகவல் தாளின்படி 'OMP' க்கு உறுப்பினர்களின் நியமனம் என்ற விரைவு இணைப்புடன் தயாரிக்கப்பட வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், அரசியலமைப்பு சபையின் செயலாளர் நாயகம், அரசியலமைப்பு சபை அலுவலகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 09 டிசம்பர் 2024 அன்று அல்லது அதற்கு முன் பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது 'constitutionalcouncil@parliament.lk' என்ற மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ச-இ)

# பருத்தித்துறைப் பிரிவில் வீடு திரும்பாது 1389 பேர்

யாழ்ப்பாணம், டிசெ. 1

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று நலன்புரி முகாம்களில் 1389 பேர் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 1476 குடும்பங்களை சேர்ந்த 5584 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மழை நின்றுள்ள போதிலும் மழை வெள்ளம் வடிந்தோடாது உள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்தும் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் மூன்று வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ள நிலையில் 79 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மேலும் 7 அடிப்படைக் கட்டமைப்புகளும் சேதமடைந்துள்ளன.

நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருபவர்கள் படிப்படியாக வீடுகளுக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-100)



வெள்ள இடர்கால நிலை

# சிறீதரன் எம்.பி. ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்கின் வெள்ளப் பேரிடர்ப் பாதிப்புத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது, வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்கல், காலநிலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான எதிர்கால [illegible] பில் கலந்துரையாடப்பட்டது. (ச-13)

# இடர் அபாயத்திலிருந்து குடும்பத்தை காத்த நாய்

கொழும்பு, டிசெ, 1

களுத்துறை, தொடங்கொட பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கமகொட பகுதியில் நாயினால் குடும்பம் ஒன்று காப்பாற்றப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் பெய்த கடும் மழையுடன் கூடிய காற்று காரணமாக புளிய மரத்தின் கிளையொன்று வீடொன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக வீடு முற்றாக இடிந்துள்ளதுடன், வீட்டில் இருந்தவர்கள் அதிஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர். வீட்டில் இருந்த வளர்ப்பு நாயாலேயே வீட்டில் உள்ளவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். உரிமையாளரின் படுக்கையறையின் படுக்கைக்கு அருகில் வந்த நாய் நுளம்பு வலையை கடித்து கிழித்ததுடன், வீட்டு உரிமையாளரின் ஆடையைக் கடித்து இழுத்துள்ளது. வீட்டின் ஏனையவர்கள் உறங்கும் அறைக்கும், உரிமையாளரை இழுத்து சென்ற நாய், அவர்களையும் வெளியே அழைத்து சென்றுள்ளது. குடும்பத்தினர் வெளியே வந்து சில நிமிடங்களில் மரத்தின் கிளை வீட்டின் கூரையின் மீது விழுந்துள்ளது.

நாயின் செயற்பாட்டினால் அனைவரும் விழித்துக் கொண்டமையால், உயிராபத்தில் இருந்து தப்பியதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** தாய் வழி உ றவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களு் காக வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும்..சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், வாகனத் தில் செல்லும்போது கவனம் தேவை. விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற் படும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று வேண்டுதல்களை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள் வருகையால் வீட்டில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணை வழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** இன்றைக்கு உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். தந்தை வழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மாலையில் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வருவீர்கள்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

## திருமறைக் கலாமன்ற வைரவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.1

திருமறைக் கலாமன்ற வைர விழாவில் யாழ். இல.17,மார்ட்டீன் வீதியில் அமைந்துள்ள கலை ஞானசுரபி தியான இல்லத்தில் காலை 6.30 மணிக்கு நன்றி வழிபாடும், யாழ். இல.238,பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் மு.ப 10மணிக்கு குருதிக் கொடை நிகழ்வும், யாழ். இல.286,பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் மாலை 4மணிக்கும் இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ். பிரதேசச் செயலர் சாம்பசிவம் சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைநிகழ்ச்சிகளாக கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் நடனம், திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் வழங்கும் 'நஞ்சுண்ட கண்டன்' நாடகம், 'விண்ணக வீரன்' வடமோடி நாடகம் என்பவற்றுடன் கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. (ரி-25)

## கூட்டுறவுப் பெரியாரின் 60 ஆவது நினைவுதினம்

யாழ்.கூட்டுறவுச் சபையினரின் ஏற்பாட்டில், கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 60 ஆவது நினைவுதின நிகழ்வு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் க.மகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான ந. திருலிங்கநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவியாளர் கி.சந்திரசேகரன், கௌரவவிருந்தினர்களாக யாழ்.கால்நடை வ.கூ.ச.சமாசத் தலைவர் அன்ரன் கரிஸ்ரர், யாழ்.மா.ப.தெ.வ.அ.கூ.சமாசத் தலைவர் செ.செல்வராசா, யாழ். விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவர் மா.செல்வராசா, யாழ். சி.க.வ.கூ.சமாசத் தலைவர் ச.பரமானந்தன், யாழ் கடற்றொழிலாளர் கூ.சமாசத் தலைவர் அ.மரியதாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக் கழகப் பதிவாளர் வி.காண்டீபன் நிகழ்த்துவார்.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர். (ச-25-10)

## நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.1

ஜீவ நதி வெளியீடுகளான கந்தர்மடம் அ.அஜந்தனின் 'மரணங்களின் சாட்சியாக' (சிறுகதை) மற்றும் 'ஆற்றுப்படுத்தும் கலையும் சிலையும்' (கட்டுரைத் தொகுதி) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா, மூத்த எழுத்தாளரும், சிரேஷ்ட உதவியாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் ஏ-1 ராஜா கிறீம் ஹவுஸ் ஹம்சியா மஹாலில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நூல்களின் வெளியீட்டுரையை ஜீவநதி பிரதம ஆசிரியர் க.பரணீதரனும், அறிமுகவுரையை எங்கட புத்தகங்கள் நிறுவுநர் கு.வசீகரனும், கருத்துரையை யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், சிரேஷ்ட உளவளத்துணையாளர் திருமதி புவனலோஜினி ஜீவானந்தம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச-25-10)

## நன்றி செலுத்தும் ஆராதனை

யாழ்ப்பாணம், டிசெ.1

சீயோன் தேவாலயம் இலங்கையின் 65ஆவது ஆண்டு நிறைவு நன்றி ஆராதனை நிகழ்வு தேவாலயத்தின் பிரதம போதகர் வண.ஜோஹணன் பிலிப் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இல.24 , இராமையாச்செட்டியார் ஒழுங்கையிலுள்ள பிரதான ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கையின் மூத்த போதகர்களில் ஒருவரும், கல்வாரி தேவாலயம் இலங்கையின் பிரதம போதகருமான கலாநிதி திஸ்ஸ வீரசிங்ஹ கலந்து கொள்ளவுள்ளார். (ரி-45-10)

## புனரமைக்கப்படும் அபாயவெளி பாதை

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கின் ஆழியவளையிலிருந்து இயக்கச்சி செல்கின்ற அபாயவெளிப் பாதை மழைவெள்ளம் காரணமாக சேதம் ஏற்பட்டிருந்த நிலையில் அதனை புனரமைக்கும் பணியில் பருத்தித்துறை பிரதேசசபை நேற்றுமுன்தினம் ஈடுபட்டது.

இந்தப் பாதையால் நாளாந்தம் வர்த்தக ரீதியிலான பயணத்தில் ஈடுபடுவோர் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் பணிகளுக்கு செல்வோரும் பல சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த நிலையில் மக்களின் தொடர் கோரிக்கைக்கமைய பருத்தித்துறை பிரதேசசபையால் வீதியின் ஒரு பகுதி தற்காலிகமாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. (ச-27,113)

## மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 1

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி நிறுவனத்தால் 'நிலை பேறான எல்லாவற்றையும் உள்ளடக்கிய எதிர்காலத்துக்கான மாற்றுத்திறனாளிகளின் தலைமைத்துவம் மேம்படுத்தல்' எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு நல்லூர் ஆதீன மண்டபத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது. நிறுவனத்தின் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

வெற்றியடைவது எப்படி என்பதை அறிய எல்லோரும் விரும்புகிறார்கள், ஆனால் தோல்வியை ஏற்றுக்கொள்வது எப்படி என்பதை அறிய யாரும் விரும்புவதில்லை

- புரூஸ் லீ -


# மாற்றத்தின் முகம் இதுவல்ல!

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒளிப்படத்தைப் பேஸ்புக்கில் பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடூரத்தையும், அதன் கோர முகத்தையும், அது வழங்கும் வலியையும் தாம் அறிவோம் என்றும், ஆதலால் அந்தச் சட்டம் முற்றாக நீக்கப்படும்' என்றும் கூறி ஆட்சியில் ஏறிய அநுர அரசாங்கம், தாமும் சிங்கள பேரினவாத சித்தாந்தத்தை மையமாகக் கொண்ட ஆட்சியின் தொடர்ச்சியே என்பதை இந்தக் கைதின் மூலம் நிரூபித்திருக்கின்றது.

தற்காலிக ஏற்பாடு என்று தெரிவித்தே பயங்கரவாதத் தடைச்சட்டம் அரசமைப்பில் இணைக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டில், இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ என்று கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் 45 ஆண்டுகளாக இலங்கை அரசமைப்பில் ஒட்டிக்கொண்டிருக்கின்றது. அந்தச் சட்டத்தின் விளைவால் முதலில் பலியாக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள். உலகில் கடைந்தெடுத்த மோசமான பயங்கரவாத தடைச் சட்டம், எத்தனையோ தமிழர்களின் வாழ்வுக்கு சாவு மணியடித்திருக்கின்றது. மிக மோசமான இந்தச் சட்டத்துக்கு எதிராக தமிழர் தேசம் பலமாகக் குரல் கொடுத்திருக்கின்றது - கொடுத்து வருகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்ட - அதன் வலியை அனுபவித்துணர்ந்த சிங்களத் தரப்பு என்றால், அது ஜே.வி.பி.யினர்தான். 1987 காலப் பகுதியில் அரசாங்கத்துக்கு எதிராக ஜே.வி.பி.யினர் மேற்கொண்ட போராட்டங்களை அடக்கியொடுக்குவதற்கு இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பெரும் பங்காற்றியது. இதனால், அந்தச்சட்டத்தை அநுர தரப்பினர் மென்போக்காக அணுகுவார்கள். நடைமுறைக்குப் பிறழ்வான அந்தச் சட்டத்துக்கு முடிவுகட்டியே தீருவார்கள் என்றெல்லாம் கருதப்பட்ட நிலையில் - கோத்தாபய, ரணில் அரசாங்கங்களே பரவாயில்லை என்றுகூறும் அளவுக்கு நடந்திருக்கின்றது தேசிய மக்கள் சக்தி. ஒரு வலியை அனுபவித்தவன் - உணர்ந்தவன், அந்த வலியை அடுத்தவனுக்கு வழங்கும் போது அவன் பாரதூரமான குற்றவாளியாகின்றான். அந்த வகையில் வதைப்பதையே நோக்கமாகக் கொண்ட கடந்த கால அரசாங்கங்களிலும் பார்க்க, வலியுணர்ந்து வதைக்கும் அநுர அரசாங்கம் மோசமானது - சுயநலமானது - சந்தர்ப்பவாதம் கொண்டது.

தமிழர்களுக்கு எதிரான மனோநிலையிலும், தமிழர்களை வதைக்கும் அரசகட்டமைப்புகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தாமல் இருந்துகொண்டு, இறந்தோரை அஞ்சலிக்க அனுமதித்தோம், பாதையொன்றை விடுவித்தோம் என்று கூறி அநுர தரப்பு தமக்குத் தங்கமுலாமைப் பூச எத்தனித்தல் தகாது. ஏனெனில், கோத்தாபயவின் காலத்தில்கூட மாவீரர்நாள் தீபங்கள் சுடர்விடத் தவறவில்லை. இறந்தோரை அஞ்சலிப்பதற்கு நீதிமன்றங்கள் தடைபோட்ட வரலாறு தாயகத்தில் இல்லை. அரச படைகளின் கெடுபிடிகளை மீறி சுடர் விட்டெரியாத தீபங்களும் இங்கில்லை. எனவே, மாற்றம் என்பதை அஞ்சலிப்புக்கான அனுமதி என்று கொள்ளாது அரச கட்டமைப்பில் ஏற்படும் அடிப்படை மாற்றமாக அநுர அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.



# உள்ளூராட்சித் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்கள்

கொழும்பு, டிசெ.1

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கு அரசாங்கம் தயாராகிவருகின்றது.

இது தொடர்பில் அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக விசேட கூட்டமொன்று அடுத்தவாரம் நடைபெறவுள்ளது. உள்ளூராட்சித் சபைத் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டிருந்தாலும் நிதியின்மை விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டு தேர்தல் கடந்த ஆட்சியின்போது பிற்போடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த தேர்தலை விரைவில் நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனினும், தேர்தலுக்காக வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ள சிலர் வெளிநாடு சென்றுள்ளனர், மேலும் சிலர் உயிரிழந்துள்ளனர். சிலர் கட்சி மாறியுள்ளனர். எனவேதான் புதிதாக வேட்புமனு கோருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ச-44)

# வெளிநாட்டு பயணங்களை சட்டரீதியாக மேற்கொள்க

ஜெனீவா, டிசெ. 1

வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும்போது உரிய முறையில் சட்டபூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்று வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்ற சர்வதேச புலம்பெயர்தல் அமைப்பின் 115 ஆவது மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சரின் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரை மாநாட்டில் ஒலிபரப்பப்பட்டது. ஒலிபரப்பப்பட்ட உரையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. (ச-25-6)



# பராத்தே சட்டம் மேலும் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 1

'பராத்தே சட்டம்' மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்படும் என நிதி திட்டமிடல் பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெருமா தெரிவித்துள்ளார். சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் உற்பத்தியாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ச-25.6)

# வீடுகள் சேதம்; கொடுப்பனவு



கொழும்பு, டிசெ.1

வெள்ளத்தினால் சேதமடைந்த வீடுகளை புனரமைக்க முதற்கட்ட கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக வீடமைப்பு பிரதியமைச்சர் பி.சரத் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக 95 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் ஆயிரத்து 798 உடைமைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சேதம் தொடர்பான மதிப்பீடுகள் பூர்த்தியானதும் இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (ச-25, 6)

# ஆளும் எம்.பி.களுக்கே அதிக வீடுகள் ஒதுக்கீடு!

கொழும்பு, டிசெ. 1

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட வீடுகளில் 80 வீடுகள் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் 28 வீடுகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் ரொஷானி குணதிர தெரிவித்துள்ளார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறிய வீடுகளை துப்புரவாக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. டிசெம்பர் 2 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கையளிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை விமான நிலையம் பெங்கால் புயலால் மூடல்

சென்னை, டிசெ, 1

கனமழை, புயல் எச்சரிக்கை காரணமாக சென்னை விமான நிலையம் நேற்று மூடப்பட்டது. நண்பகல் 12 மணி முதல் இரவு 7 மணி வரை விமான நிலையம் மூடப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் 'பெங்கால்' புயலாக வலுப்பெற்றுள்ளது.

புயல் நேற்று மாலை புதுச்சேரி அருகே கரையைக் கடக்கலாம் என்று கணிக்கப்பட்டது.

இந்த நிலையில் சென்னை விமான நிலைய ஓடுபாதையில் தண்ணீர் தேங்கியிருப்பதால் நண்பகல் 12 மணி முதல் இரவு 7 மணி வரை விமான நிலையம் மூடப்பட்டது. அத்துடன் புறநகர் மின்சார ரயில் சேவையும் குறைக்கப்பட்டிருந்தது.

(ச-இ)

தாதியராகும் உங்கள் கனவை நனவாக்க முதற்படி...

பராமரிப்பாளர் பயிற்சிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 05.12.2024

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு




- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)


கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
TVEC Approved Institution
340, Pointpedro Road, Jaffna.
தொடர்பு:070 7070 722

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1943



மறைவு 28 . 11 . 2024

### நாகேந்திரர் நாகநாதபிள்ளை

யாழ்ப்பாணம் சரவணை கிழக்கு, வேலணை கரப்பியன் 9ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், சுருவில் ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் தற்பொழுது இல.67, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நாகேந்திரர் நாகநாதபிள்ளை கடந்த 28.11.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அரியக்குட்டி- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோரஞ்சிதம் (ராசு) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, மனோன்மணி, அருமைநாயகம், லட்சுமி, தியாகராசா, தாட்சாயினி, அம்பிகாவதி, தவராசா, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பேரின்பவதி, ஜெயவதி, ரூபவதி, சகிலன், செல்வதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேந்திரன், சிவசீலன், சுகிர்தா, சிறிவீரவிசயன் ஆகியோரின் மாமனாரும், செந்தூஷ், சிவதீஷ், வைஷ்ணவி, அருணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2024) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 67 சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 655 4575

(CS 1951) P-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 09 . 1958



விண்ணில் 29 . 11 . 2024

### இரத்தினசபாபதி குருபரன்

(ஓய்வுபெற்ற யாழ்மாவட்ட செயலக உத்தியோகத்தர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கசண்டிலிப்பாய் பிரிவு முன்னாள் தலைவர், லயன்ஸ் கழக உறுப்பினர்)

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி குருபரன் அவர்கள் 29.11.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இரத்தினசபாபதி - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நெடுந்தீவைச் சேர்ந்த நா.கணபதிப்பிள்ளை (விதானையார்) - சற்குணம் (ஆசிரியர்) தம்பதியரின் மருமகனும், தயாபரன் (ஜேர்மனி), சிவபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், உதயவேணி (ரஜனி - ஓய்வுபெற்ற யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு கணவரும், மதன்ராஜ் (பொறியியலாளர், ஐக்கிய மக்கள் சக்தி யாழ்மாவட்ட அமைப்பாளர், ஊர்காவற்றுறைத் தொகுதி பிரதம அமைப்பாளர்) அவர்களின் அன்புத் தந்தையும், கௌதமியின் பாசமிகு மாமனாரும், ஜெயரட்ணராஜா (ஓய்வுபெற்ற உப அதிபர், யாழ் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற ஜெயேந்திரா ஆகியோரின் அன்புச் சம்பந்தியும், சசிகலா (ஜேர்மனி), சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வினித்தா (கனடா), ஜெனித்தா (ஜெர்மனி), சிந்துவர்மன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், காலஞ்சென்ற புவனேந்திரராணி மற்றும் கிருபானந்தன், சிவானந்தன் (கனடா), கமலராணி (பிரான்ஸ்), அழகானந்தன் (கனடா) ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், காலஞ்சென்ற கிருஷ்ணவேணி மற்றும் கமலவேணி (லண்டன்), குமாரசூரியர் (லண்டன்), கேதீஸ்வரநாதன், சிவஞான வேணி (கனடா), ஆகியோரின் மைத்துனரும், சுபாசினியின் (கனடா) பாசமிகு மாமாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (03.12.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 09.30 மணியளவில் இல 30/1, நீக்கிலாஸ் லேன், கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்
மதன்ராஜ் (மகன்) - 071 240 0001
கௌதமி (மருமகள்) - 077 922 8962
உதயவேணி (மனைவி) - 077 134 9443

நல்லூர்.

(CS/56801) J-1

## மரண அறிவித்தல்

மண்ணுலகில் 09 . 01 . 1950



விண்ணுலகில் 29 . 11 . 2024

### நன்னியர் இரத்தினம்

கணேஸ்வரம், அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் இரத்தினம் அவர்கள் நேற்றுமுன்தினம் (29.11.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர் - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தன் - தங்கமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, வைரமுத்து, சின்னத்தம்பி, சுப்பிரமணியம், சந்திரன் மற்றும் தம்பிமுத்து (சட்டத்தரணி), சறோஜாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சயந்தினி (ஆசிரியை, அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை), குயிலினி (பிரான்ஸ்), கஜந்த் (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர், ஆயுர்வேத வைத்தியசாலை, பாண்டியன்குளம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகுலதீபன், சசிகரன், விஷ்னுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தருண், அஸ்மிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, செபமாலை இரத்தினம் மற்றும் சகுந்தலாதேவி, மனோன்மணி, முத்துலிங்கம், இரத்தினம், காலஞ்சென்றவர்களான இராசமணி, குமாரசாமி மற்றும் விஜயரட்ணம், நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS/1952) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## உள்ளூராட்சித் தேர்தல்; திட்டமிடலில் பெரமுன

கொழும்பு, டிசெ. 1

உள்ளூராட்சி சபைத் தேர்தலை பலமான அணியாக எதிர்கொள்வோம். அதற்கான தயார்ப்படுத்தல்களில் தற்போது ஈடுபட்டுவருகின்றோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் புதிதாக வேட்புமனு கோருவதற்கு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியக்கிடைத்துள்ளது. எனவே, புதிதாக வேட்புமனு கோருவதற்குரிய சட்டதிருத்தம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படக்கூடும்.

அந்தவகையில் புதிதாக வேட்புமனுக்களை முன்வைக்கத் தயாராக வேண்டும். கட்சியைக் காட்டிக்கொடுக்காதவர்கள்தான் எமக்கு முக்கியம். எம்மைவிட்டுச் சென்றவர்களுக்கு மக்கள் ஆதரவில்லை என்பது அண்மையில் நடைபெற்ற தேர்தலில் உறுதியானது.

வடக்கு, கிழக்கு, 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் ஒற்றையாட்சி போன்ற விடயத்தில் உறுதியான கொள்கையில் இருக்கும் ஒரே கட்சி எமது கட்சியாகும். அந்தக் கொள்கையுடனேயே பயணிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

### யாழ்ப்பாணத்தில்
# அஞ்சல் சேவைகள் வழமைக்குத் திரும்பின

யாழ்ப்பாணம், டிசெ, 1

யாழ். மாவட்ட தபால் சேவைகள் அனைத்தும் மீள வழமைக்குத் திரும்பியுள்ளதாக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் உதயனுக்கு தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பாக யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட அஞ்சல் சேவையின் நிலைமைகள் தொடர்பில் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையின் காரணமாக தீவகத்துக்கான அஞ்சல் சேவை தடைப்பட்டிருந்தன .கடந்த 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நெடுந்தீவுக்கும் கடந்த 26 முதல் 28 வரையான காலப்பகுதியில் நயினாதீவுக்கும் 26 முதல் 29 ஆம் திகதி வரை அனலைதீவுக்குமான படகுச் சேவைகள் இடம்பெறாத நிலையில் அஞ்சல் சேவை தடைப்பட்டது. இந்தநிலையில் அனைத்து அஞ்சல் சேவைகளும் வழமைக்கு திரும்பியுள்ளன. அதேவேளை இடைதங்கல் முகாம்களில் வாழ்ந்து வரும் பொதுமக்களின் தபால்களை அவர்கள் வீடுகளுக்குத் திரும்பியதும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-125)



## மருந்துகளுக்கு பற்றாக்குறை

கொழும்பு, டிசெ, 1

அரசாங்க மருத்துவமனைகளில் மருந்துப் பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களது சங்கத்தின் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சமால் சஞ்சீவ இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மருத்துவ விநியோகப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் சுமார் 300 மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை காணப்படுகிறது.

மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்யும் பொறிமுறைமையில் ஏற்பட்டுள்ள கால தாமதம் காரணமாக இவ்வாறு மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

நீரிழிவு நோயாளிகள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள் உள்ளிட்ட பல்வேறு நோயாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மருந்துப்பொருள்களே இவ்வாறு பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



## பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ, 1

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மறை 0.8 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் நவம்பர் மாதத்தில் மறை 2.1 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. (ச)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.1


மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பாலஸ்தாபன பாலாலய கும்பாபிஷேகம் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9 மணி வரை நடைபெறவுள்ளது.

திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடைபெற்று எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என மாவை ஆதீனக்கர்த்தா மஹாராஜஸ்ரீ சு.து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார். (ரி-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சர்வதேசமட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிக்காக பெல்ஜியம் செல்லும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் பா.கசிபனுக்கு பழையமாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 730,000ரூபா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச- 33-110)




## உணவுப்பொதிகள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.1

யாழ்.மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் மற்றும் பொதுமண்டபங்களிலும் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் கிராம அலுவலர்களின் ஒருங்கிணைப்பில் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ரி-66)





வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டு பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியால நலன்புரி முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு தன்னார்வ கொடையாளர்களால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-25, 100)





## சமைத்த உணவு வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ, 1

வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு யாழ்.கொடிகாமம் மத்தி றோ.க.த.க பாடசாலை, யாழ். கொடிகாமம் தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் யாழ்.நுணாவில் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ள 320 பேருக்கு சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் சமைத்த உணவு வழங்கிவைக்கப்பட்டுள்ளது. (ச-25,66)





யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்த அடைமழையால் யாழ்.சுன்னாகம் மயிலணி முருகன் ஆலயம், மயிலணிச் சிவன் ஆலயம் மற்றும் மயிலணி இராஜராஜேஸ்வரி ஆலயம் ஆகிய மூன்று ஆலயங்களும் வெள்ளம் சூழ்ந்து காணப்பட்டன. (ச-25-66)



சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு வடமராட்சி நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள 270 பேருக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றத்தினரால் நேற்றுமுன்தி னம் வெள்ளிக்கிழமை உணவு வழங்கிவைக்கப்பட்டுள்ளது. வல்லை சிதம்பரா கல்லூரி, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், [illegible] சவேரியார் தேவாலயம் ஆகிய நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோருக்கே இவ்வாறு உணவு வழங்கி வைக்கப்பட்டது. (ச-25,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ள இடர் தணிப்புகள் இப்போதே திட்டமிடுங்கள்

## வடக்கு ஆளுநர் பணிப்புரை!


**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மழை வெள்ள நிலைமை எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் அதிகாரிகள் இப்போதே திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டுமென வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கூட்டத்திலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது பிரதேசத்தில் அதிகூடிய பாதிப்பு ஏற்பட்ட இடங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வெள்ள இடர் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மாத்திரமே சமைத்த உணவு உள்ளிட்ட நிவாரணங்கள் வழங்கக் கூடியதாக உள்ளது. உறவினர் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கும் அவ்வாறான உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும். பல இடங்களில் ஆபத்தான மரங்களை அகற்றுவதற்கு மரக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புப் போதியளவு தேவையாக உள்ளதுடன் தீவுப் பகுதிகளுக்கான மின்சாரத்துக்குரிய எரிபொருளை விரைந்து வழங்குவதற்கு கடற்படையினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

குறிப்பாக வெள்ள வாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட சட்டவிரோதக் கட்டடங்களை உடனடியாக இடித்தகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (ரி-66)



கொழும்புத்துறை நெடுங்குளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எழுபது குடும்பங்களுக்கு மாநகரசபை முன்னாள் துணை முதல்வர் ஈசனால் உணவு வழங்கி வைக்கப்பட்டது. (ச-25,20)






வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள வலிகாமம் கிழக்கு வாதரவத்தைக் கிராமத்தின் அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பிலுள்ள 70 குடும்பங்களைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்டோருக்கு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராசா நிரோசினூடாக உடுப்பிட்டி சொர்ண வைரவர் ஆலய நிர்வாகத்தினரின் நிதிப்பங்களில் சமைத்த உணவுகள் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ச-25,66)



# உணவு வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ,1

காரைநகர் வலந்தலை சிவகௌரி சமூக அமைப்புகளும் இளையோர் அமைப்பினரும் இணைந்து, புலம்பெயர் உறவுகள் மற்றும் நலன்விரும்பிகளின் பங்களிப்போடு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைநகர் வடகிழக்கு மற்றும் காரை கிழக்குப் பிரதேசங்களில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சமைத்த உணவை வழங்கி வருகின்றனர். (ச-25, 125)

## வவுனியாவில்

# வடிகிறது வெள்ளம் வீடுகளுக்கு மக்கள்

வவுனியா, டிசெ. 1

வவுனியாவில் மழை குறைவடைந்து தாழ்நிலப்பகுதிகளில் இருந்து வெள்ளநீர் வடிந்தோடி வருவதனால் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர்.

அதேவேளை நேற்றுமுன்தினம் மாலை நிலைவரப்படி ஆயிரத்து 516 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 224 பேர் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 3 ஆயிரத்து 22 பேர் உறவினர் வீடுகளிலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 11 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த அனைவரும் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

அதேவேளை சீரற்றகாலநிலையால் வவுனியாவில் இதுவரை 204 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், 55 குளங்களில் பெரும் உடைவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.1

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கர்நாடக சங்கீதப் போட்டி ஜாவளி தனி இசை நிகழ்வில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற சிவானந்தாராஜா சிவகலை மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சு.விஜிதா, தென்மராட்சி கல்வி வலய சங்கீத பாட வளவாளர் திருமதி ம.லோ ஜினி கலந்துகொண்டனர். (ரி-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் தென்னை அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் திருமதி பி. சுபாசினி அவர்களின் அன்புத் தாயார்

**கமலாதேவி சுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு: 23.10.1951
இறப்பு: 30.11.2024

பிரிவால் துயருறும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
பளை - கிளிநொச்சி

(cc43336) (N-1)

# இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 56

* Diploma in English / Spoken English
* Diploma in Information & Communication Technology
* Diploma in Artificial Intelligence (AI)

ஏனைய பிரிவுகள்

* Diploma in Human Resource Management (ICVE Approved)
* Diploma in Human Rights
* Diploma in Foundation Law
* Diploma in Leadership & Business Management
* Diploma in Caregiver
* Diploma in Political Science

ஆரம்பம் 07.12.2024

| காலம் | பெறுமதிமிக்க |
|---|---|
| 03 மாதங்கள் | சான்றிதழ் |

(CS 1925) A-1

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறை கால வகுப்புக்கள்,
English, ICT (Grade 6-11, G.C.E O/L.A/L)
ஆரம்பமாகின்றன.

IPS to your future
Thirunelvely
T.P: 077 570 4893
077 016 1143


வெள்ளப்பேரிடர் எதிரொலி

# பெருந்தொற்றுகளைத் தவிர்ப்பதற்கு சிறப்புச் செயற்றிட்டம் முன்னெடுப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 1**

**சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால், கொலரா மற்றும் டயரியா போன்ற நோய்கள் பரவாது இருப்பதற்காக சிறப்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: அண்மையில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக குடிதண்ணீர் கிணறுகளில் வெள்ளநீர் கலந்துள்ளது. இதனால், கொலரா மற்றும் டயரியா போன்ற நோய்கள் பரவும் ஆபத்துக் காணப்படுகின்றது. எனவே, அவ்வாறு வெள்ளநீர் கலந்த கிணறுகளுக்குள் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலுடன் குளோரின் இடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் மிகவும் ஆர்வத்துடனும், அக்கறையுடனும் இந்தச் செயற்றிட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார். (ம-125)


**வேலைவாய்ப்பு**

யாழ் நகர் பகுதியில் இயங்கும் சிறிய விடுதிக்கு அறை பராமரிப்பாளர் தேவை. சம்பளம் (ஆண்கள்-40,000/-, பெண்கள்- 30,000/-)
தொடர்புகளுக்கு:
**077 993 8348**

**The Royal College of Jaffna**
தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
O/L, A/L கலைப்பிரிவு வகுப்புகள்
சிறு குழுக்களாக சிறந்த ஆசிரியர்கள் மூலம் நடைபெறுகின்றன.
குபேரன் கட்டட மாடி, சங்கானை நகர மத்தி
**Tel: 077 675 1649**



# காசாவில் பஞ்சம் தீவிரம்

காசாவில் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்றும், மிக விரைவில் உதவிகள் வழங்காவிட்டால் போரால் ஏற்படும் உயிரிழப்புக்களுக்கு மேலாக பஞ்சத்தாலும் உயிரிழப்புக்கள் ஏற்படும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து காசாவில் போர் நிறுத்தம் செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பில் பல தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, காசாவில் நிலவும் பஞ்சம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை வெளிப்படுத்தியுள்ளது.

காசாவில் இடம்பெறும் மோதல்களால் அங்கு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவு மற்றும் சுத்தமான குடிநீரின்றி சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். எனவே, அந்த மக்களுக்கு அடிப்படை உதவிகளைக் கொண்டு சென்று சேர்க்க வேண்டியது மிகவும் அவசியமாகவும் அவசரமாகவும் உள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை மேலும் தெரிவித்துள்ளது. காசாவுக்குள் செல்லும் உதவித் திட்டங்கள் பொதுமக்களைச் சென்றடையவில்லை என்றும், அவை ஹமாஸ் போராளிகளால்தான் பயன்படுத்தப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டியுள்ள இஸ்ரேல், உதவித் திட்டங்கள் காசாவுக்குள் செல்வதற்குத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)


# மரண அறிவித்தல்



**தம்பிராசா சுந்தரலிங்கம்**

யாழ்ப்பாணம் காரைநகர் வலந்தலையை பிறப்பிடமாகவும் வவுனியா மற்றும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா சுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (30.11.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - சுந்தரம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மங்கையற்கரசி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் விஜயலட்சுமி, தனலட்சுமி, சிவநாதன் (உப தபால் அதிபர், கோவில் குளம்), இந்திராதேவி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, புவனேஸ்வரி, தில்லைராஜேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற இலிகிதர் - இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், தலைமைக் காரியாலயம்), காலஞ்சென்றவர்களான கோபாலகிருஸ்ணன், வசந்தி இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், Dr.A.P.மயூரேசனின் (வைத்திய நிபுணர்) பாசமிகு சிறிய தந்தையும், திவ்யா (நில அளவையாளர் திணைக்களம், கொழும்பு), சௌம்யா (உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), சர்மிளா நிசாந்தன் (RDA, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், நிசாந்தன் (Virthusa PVT Ltd), மாதங்கி, நர்த்தனன், வித்தகன், சுபாங்கி, லாவண்யா மயூரேசன், செந்தூரன், சிவரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.45, இந்து மகளிர் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 03.09.1936 | 29.11.2024 |



**ஆசீர்வாதம் பிரான்சிஸ் (செல்வராசா)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவில், பிரான்ஸ் மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் பிரான்சிஸ் (செல்வராசா) அவர்கள் கடந்த 29.11.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஆசீர்வாதம் மாகிறேற் தம்பதிகளின் மகனும், வெலிச்சோர் மாகிறேற் மரியம்மா தம்பதிகளின் மருமகனும், மேரி றோசலின் (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் அன்புக் கணவரும், சென். ஜோர்ச் (பிரான்ஸ்), மேரி மரீனா (நோர்வே), சென். எடின்பரோ (சுவிஸ்), அன்ரன் கெனடி (சுவிஸ்), மேரி மெற்றில்டா (ஜேர்மனி), தோமஸ் எடிசன் (விரிவுரையாளர், ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், யாழ்ப்பாணம்), டென்சலீனா (பிரான்ஸ்), டிக்சன் (பிரான்ஸ்), அல்வீனஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி (பிரான்ஸ்), அன்ரனி பத்மராஜா (நோர்வே), மேரி ஜெலா (சுவிஸ்), மேரி (சுவிஸ்), மகேந்திரன் (ஜேர்மனி), ஜெனிஸ்ரெலா (அதிபர், யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்), உதயாகரன் (பிரான்ஸ்), ஒலிவற் தாரணி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் கஸ்தூலப்பர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 05.12.2024 வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல, 01. சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
F.T எடிசன் - மகன்
0762088883


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

வவுனியா தாதியர் பயிற்சி கல்லூரி அதிபராக கடமையாற்றும் P.B. சிவயோகம் அவர்களின் அன்புத் தந்தை

### P. பாலசிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.56798) (N.1)

# பன்றிக்காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள்

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக அரசு கால்நடை மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நோயினால் பாதிக்கப்படாத பண்ணைகளில் உள்ள இறைச்சியை தனிமைப்படுத்தல் முறையின் கீழ் மனித பாவனைக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்ப டும் என சங்கத்தின் தலைவர் சிசிர பிய சிறி தெரிவித்துள்ளார்.

தமது தொழில்களை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் நஷ்டாடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டு மென பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
04 . 05 . 1940



மறைவு
28 . 11 . 2024

### ஆறுமுகம் கனகசிங்கம்

**நெஞ்சமதில் நிலைத்து நின்று**
**எண்ணமதில் என்றும் நிலைத்து**
**வண்ணமலர் வாசமாக மனதில் நின்றீர்**
**கண்ணிமைக்கும் நேரத்தில்**
**காலனுமைக் கவர்ந்து சென்றதேனோ?**
**கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம்**
**மனம் வெதும்பி வாடுகின்றோம்.**


எனது தந்தையாரின் சிநேகிதரும், குடும்ப நண்பருமாகிய ஆறுமுகம் கனகசிங்கம் அவர்கள் கடந்த (28.11.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாரங்கா நகைமாடம்**
**வெங்கடேஸ்வரா பேருந்து உரிமையாளரும்,**
**ஊழியர்களும்**

(CS/56800) J-1

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அந்தியேட்டி அழைப்பு



**அமரர்**
**சிவப்பிரகாசம் தியாகராஜா**

Car Tech Automobiles (Pvt) Ltd
பஞ்சிகாவத்தை, கொழும்பு உரிமையாளர்

அன்னை மடியில் 22.10.1949 — ஆண்டவன் அடியில் 02.11.2024

குரோதி வருடம் ஐப்பசி மாதம் 16ம் நாள் சிவபதமடைந்த எமது குடும்ப தலைவரும் Car Tech Automobiles (Pvt) Ltd பஞ்சிகாவத்தை, கொழும்பு உரிமையாளருமாகிய

### அமரர். சிவப்பிரகாசம் தியாகராஜா

**அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் மற்றும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகள் நாளை (02.12.2024) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருவதோடு அதனைத் தொடர்ந்து நடக்கவிருக்கும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.**

எமது குடும்ப தலைவனை இழந்து தவித்த வேளையில் உடன் ஓடி வந்து பல வகையிலும் உதவியும், இறுதிக் கிரியைகளுக்கு தேவையான உதவிகளைச் செய்தும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் சமர்ப்பித்து எமது துயரில் பங்கெடுத்து உடனிருந்த உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். தொலைபேசி மூலமும் ஏனைய வழிகளிலும் தொடர்பு கொண்டு ஆறுதல் வார்த்தைகள் நல்கியவர்களுக்கும் நன்றிகள்.

அன்னாரின் பிரிவு செய்தியை அறிவித்தல்கள் மூலம் பகிர்ந்து கொள்ள முடியாமையையிட்டு மனம் வருந்துகின்றோம்.

தகவல் - குடும்பத்தினர்

55/2, 2ம் குறுக்குத்தெரு, அல்விஸ்டவுன், ஹெந்தலை, வத்தளை

## மரண அறிவித்தல்

மலர்வு
21 . 03 . 1961



உதிர்வு
29 . 11 . 2024

### சோமசுந்தரம் ஈஸ்வரநாதன்

ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஈஸ்வரநாதன் நேற்றுமுன்தினம் (29.11.2024) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான சண்முகராஜா - பராசக்தி தம்பதியரின் மருமகனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் கேதீஸ்வரநாதன். ஜெகநாதன், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரி, விக்னேஸ்வரி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிருந்தா (பிரதேச செயலகம் - சண்டிலிப்பாய்), பவித்திரா (வவுனியாப் பல்கலைக்கழகம்), தீபிகா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவிசாங்கரின் பாசமிகு மாமனாரும், ஜிதுனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 936 4462**

**ஐயனார் கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/56793) N-1

## மரண அறிவித்தல்



### செல்வி சின்னத்தம்பி பாக்கியலட்சுமி

கரவெட்டிகிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்தம்பி பாக்கியலட்சுமி அவர்கள் 29.11.2024, வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், திருமதி ராஜலட்சுமி, அமரர் ரகுநாதன், அமரர் விஜயலட்சுமி, சத்தியநாதன், பரமானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் செல்வநாயகம், அம்புலி தேவி, ஒப்பிலாமணி, சரோஜினி, கௌரி ஆகியோரின் மைத்துனியும், டேவிட் சுதாகர், திவாகரன், சசிகரன், சுஜிதா ஆகியோரின் சிறிய தாயாரும், அரவிந்தன், பிரமிளா, பிரவீனா, நிவேதன், நிவேதிகா, ஷீபா, சாம்சன் ஆகியோரின் அன்பு அத்தையும், யாதுரி, யாக்னவி, அபிநயா, சரண், அக்ஷரன், மானஷி, சர்வீகா, டக்ஷயன், விகாஷினி, விதுரன், வர்சாஜினி, ரிஷிகேசன், வர்ஷிகன், திவ்யன், கிருத்திகா, லியா, லிதியா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் எதிர்வரும் (10.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் நடைபெற்று பூத உடல் வேளூண்டை கட்டைவேலி மெதடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(CR/43809) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் கோரல் - 2025

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும். புதிதாக விண்ணப்பிப்பவர்களாயின் **"முதலாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பிவைக்க வேண்டும். ஏற்கனவே 2024 ஆம்ஆண்டில் வழிபடுநர் பேரவையின் உறுப்பினர்களாக உள்ளவர்கள் தமது உறுப்புரிமையை புதுப்பித்துக் கொள்வதற்கு **"இரண்டாவது அட்டவணை"** என்ற படிவத்தை பூரணப்படுத்தி அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கோவில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வந்து பெறமுடியாதவர்கள் கீழே காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய படிவத்தை சுயமாகவே தயாரித்தும் விண்ணப்பிக்க முடியும். **விண்ணப்பமுடிவுக் காலம் 01.12.2024 தொடக்கம்31.12.2024 பிற்பகல் 5.00 மணி வரையாகும்.**

கோவிலில் உபயகாரராக இருக்கும் ஒருவர் பத்து ரூபாவுக்கான (ரூபா 10/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் உபயம் இல்லாதவர்கள் ஐம்பது ரூபாவுக்கான (ரூபா 50/=) காசுக் கட்டளை அல்லது தபாற் கட்டளையையும் பெற்று விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி வைக்க வேண்டும் கட்டளைகள் யாவும் **"பொருளாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** எனும் பெயருக்கு எழுதப்படல் வேண்டும். விண்ணப்பத்தை பூரணப்படுத்தி அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேற்பாகத்தில் **"வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம் 2025"** எனக் குறிப்பிட்டு **"செயலாளர் அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு"** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். நேரில் கையளிக்க விரும்புவோர் ஆலய அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற் பெட்டியினுள் சேர்க்கலாம். விண்ணப்பங்கள் சமாதான நீதிவான், இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், அரசாங்க பாடசாலை அதிபர், இந்து மதகுரு, கிராமசேவை உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர் உள்ளடங்கலாக அவரின் பதவிக்கான முத்திரை (றபர் ஸ்டாம்ப்) இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- **மேலதிக விபரங்கள் தேவைப்படின் 021 432 3440/ 021 432 3447 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளமுடியும்.**

**ந.மோகனரூபன்**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு**

### முதலாவது அட்டவணை - (படிவம் - 01)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்...2025..... ஆம் ஆண்டு**

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :............................................................
2. பிறந்தநாள் :............................................................
3. இந்து சமயத்தவரா?............................................................
4. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் வழிபடுபவரா? :-.............................................
5. நீங்கள் உறுப்புரிமை 03(2)(ஏ) அல்லது 03(2)(பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின்,இந்த ஆண்டு கோயிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக் கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6. இலங்கை முகவரி :- .... ............................................................
7. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை/தபாற் கட்டளையின் விபரம் :

காசுக்கட்டளை / த.க இல ............ அலுவலகமும் வழங்கிய நாளும் ............ தொகை ............

நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.
இந்தக் கோயிலில் வேதனம் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறும் ஒரு ஊழியராகவோ அல்லது குருவாகவோ நீங்கள் உள்ளீர்களா?
இக்கோயிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துவதோடு. வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..................................
விண்ணப்பதாரர் ஒப்பம்

**இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் ................. ஆம் ஆண்டு ............ மாதம் ............. நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார். என்பதை உறுதிசெய்கின்றேன்.**

என் முன்னிலையில்
..................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

**குறிப்பு** :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான். இந்து மத குரு. இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2024.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### இரண்டாம் அட்டவணை - (படிவம் - 02)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**

**2025 ஆம் ஆண்டு**

**செயலாளர்,**
**அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.**

**அன்பார்ந்த ஐயா,**

**வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்**

..................ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான எனது சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.......... அஞ்சலகத்தால் ..................... ரூபா பெறுமதிக்கு வழங்கப்பட்ட...................... இலக்கங்கொண்ட காசுக் கட்டளை / தபாற் கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் : ............................................................
முகவரி : ............................................................
எனக்குள்ள உபயம்:............................................................
உபயக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் :........................................

..................................
உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணபதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு, என் முன்னிலையில் .................... ஆம் ஆண்டு ............... மாதம் ............... நாளன்று ............ என்னுமிடத்தில் தமது கையொப்பத்தையுமிட்டார் என்பதை உறுதி செய்கின்றேன்.

என் முன்னிலையில்
..................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதிவான், இந்து மத குரு , இலங்கை நிர்வாக சேவை அலுவலர், கிராம சேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான முத்திரை "(றபர் ஸ்டாம்ப்)" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2024.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

(ct 43762) (N-1)

## மணமகள் தேவை

யாழ். இந்து. கௌரவ குடும்பம் 42 வயது சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை. தொடர்புகளுக்கு

**077 905 8615**

(CS/56785) J-1

## அரிசி இறக்குமதிக்கு விலைமனு கோரல்

கொழும்பு, டிசெ. 1

இந்தியாவிலிருந்து 70,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியை இறக்குமதி செய்வதற்கு விநியோகஸ்தர்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளதாக லங்கா சதோச நிறுவனத்தின் தலைவர் சமித பெரேரா தெரிவித்துள்ளார். அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் 7 நாள்களுக்குள் விநியோகஸ்தர்கள் விண்ணப்பிக்க முடியும் எனவும் இந்த மாதம் அரிசியை நாட்டுக்கு இறக்குமதி செய்ய வேண்டும் எனவும் சமித பெரேரா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ச-இ)

## சேவைநலன் பாராட்டு

**யாழ் போதனா வைத்தியசாலையில் 36 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும், விடுதி தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி 28.11.2024 அன்று ஓய்வுபெற்றுச் சென்ற**

**திருமதி பாமினி தமிழ்மாறன்**




அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(CS/56799) J-1

## மணமகள் தேவை

**1990, இந்து, பரணி, SOFTWARE ENGINEER**
**பூர்வீகம் - அனலைதீவு, வதியுமிடம் - SINGAPORE**
**மணமகன் பதிவு இல: 11226.**
**தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.**
**இணையவழி திருமணசேவை.**
**அழையுங்கள் 076 664 9401**
**www.EQMarriageService.com**

(CS/29298B) J-1

## மணமகன் தேவை

**1998, இந்து, மிருகசீரிடம், DEVELOPMENT OFFICER**
**பூர்வீகம் - பூநகரி, வதியுமிடம் - வவுனியா**
**மணமகள் பதிவு இல: 11222.**
**தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.**
**இணையவழி திருமணசேவை.**
**அழையுங்கள் 076 664 9401**
**www.EQMarriageService.com**

(CS/29298A) J-1

## UK Immigration Consultancy

### Student Visa

- Undergraduate and PostGraduate Degrees
- (No IELTS needed if you have O/L Credit Pass for English
IELTS தேவையில்லை க.பொ.த. (சா/தர)ப் பரீட்சையில் ஆங்கிலத்தில் C சித்தியடைந்தால் போதுமானது)
- Places available for January intake

### Skilled Worker Visa

Only the visa application
(Visa விண்ணப்பம் மட்டும் செய்து தரப்படும்)

### UK Visa Refusals

- All types of UK visa refusals (Visit visa, Student visa, Skilled worker visa, spouse visa)
- We will introduce you to experienced lawyers based in UK to handle your.
  - **Admin Review**
  - **Tribunal Appeal**
  - **Judicial Review**

(அனைத்து வகையான Visa நிராகரிப்புகளுக்குமான AdminReview.Tribunal Appeal. Judiciol Review செய்து தரப்படும்)

**Please Contact: 077 019 1110**

(CS/56779) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்டு, ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவும், அவர் தலைமையிலான குழுவினரும் அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றை வழங்கினார்கள். (ம-26)

# சர்வதேச நீதி கோரி கிழக்கில் போராட்டம்




காணாமற்போன உறவுகளுக்கு சர்வதேச நீதிப்பொறிமுறையே வேண்டும் எனக் கோரி நேற்று சனிக்கிழமை அம்பாறையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் உள்நாட்டு நீதிப்பொறிமுறையை நிராகரித்து, சர்வதேச நீதிப் பொறிமுறை வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், பல்வேறு வாசகங்களைக் கொண்ட பதாகைகளை ஏந்தியவாறு நீதியை வலியுறுத்தியும் அவர்கள் போராடினர். (ச-இ)

## இனவாதக்...

செய்யப்பட்ட அமைப்பாகும். அது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்றும் உள்ளது. இதனைமீறி செயற்படமுடியாது. அவ்வாறு வரையறைகளை மீறிய வகையில் நினைவேந்தல் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் விசாரணை நடத்தப்படும். அதேபோல் நடக்காத நினைவேந்தலை நடந்தாகக்கூறி, அரசாங்கத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், மக்களைத் தூண்டும் விதத்திலும் கடந்த கால நினைவேந்தல் படங்களை வெளியிட்டு அரசாங்கம் தொடர்பில் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கு சிலர் சதிச் செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டத்தைக் கையில் எடுத்து பழைய காலம்போல் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது. அரசியல்வாதிகள் தமது தேவைகளுக்கு ஏற்பச் செயற்படுவதற்குச் சட்டம் இல்லை. மாறாக சட்டத்தைப் பாதுகாப்பதே அனைவரினதும் கடமை.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் வெளியிடப்படாத கருத்துகளை சில ஊடகங்கள் திரிவுபடுத்தி இனவாதத்தைத் தூண்டும் வகையில் தகவல்களை வெளியிட்டுள்ளன. இவை தொடர்பிலும் விசாரணை நடத்தப்படும். இந்த நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு இடமளிக்கமாட்டோம். தோல்வியடைந்த அரசியல்வாதிகள் இனவாதத்தை கையில் எடுப்பதற்கு முற்படுகின்றனர் - என்றார். (அ-ம-44)

## பெங்கால்...

கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, வேலூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நேற்று மாலைமுதல் பலமணி நேரமாகக் கனமழை கொட்டித் தீர்த்து வருகின்றது. அந்த மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்றும் அந்த மாவட்டங்களில் கனமழை பொழியும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

புயல் காரணமாக சென்னை விமான நிலையம் நேற்று மாலைமுதல் மூடப்பட்டுள்ளது. சென்னைக்கு வரவேண்டிய விமானங்கள் பெங்களூருக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. அத்துடன், ரயில் சேவைகள், பேருந்துச் சேவைகள் என்பனவும் நிறுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மீட்புப் பணிகளுக்காக 2 ஆயிரத்து 600 இடைத்தங்கல் முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன. (அ-ம)

## ஒருங்கிணைப்புக்...

ஜனாதிபதி அநுரகுமாரவின் உத்தரவின் பேரில் கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் பொதுநிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் ஏ.எச்.எம்.எச். அபயரத்னவால் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு யாழ்.மாவட்டப் பதில் செயலருக்குப் பிரதியிடப்பட்டுக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (அ-ம-66-20-26)

## மண்ணெண்ணெய்...

92 ஒக்ரேன் பெற்றோலின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி புதிய விலையாக 309 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

95 ஒக்ரேன் பெற்றோல் விலையில் மாற்றம் ஏற்படவில்லை. அதன் விலை 371 ரூபாவாகவே பேணப்படுகின்றது.

லங்கா சுப்பர் டீசல் லீற்றரின் விலையில் மாற்றம் ஏற்படவில்லை. அதன் விலை 313 ரூபாவாகவே பேணப்படுகின்றது. (அ-ம-26)

## தவறான...

களைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

வவுனியா ஆண்டியா புளியங்குளம் பகுதியில் வசித்துவந்த 29 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர், குடும்பத்தகராறு காரணமாக கடந்த ஒரு வாரத்துக்கு முன்பாக தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீமூட்டியுள்ளார். படுகாயங்களுக்கு உள்ளான அவர் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக ஆண்டியாபுளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலையைச் சேர்ந்த குடும்பப் பெண்ணொருவர் குடும்பத் தகராறு ஒன்றில், கணவனை வெருட்டுவதற்காக தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றியபோது அவர் மீது தீ பற்றியுள்ளது. இதையடுத்து கடும் காயங்களுக்கு உள்ளான அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சையின் போது அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-18-110)

## வடக்கின்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து வடக்குத் தொடர்பான பாதுகாப்புக் கட்டுப்பாடு முழுமையாகக் கைநழுவிப் போயுள்ளது. வடக்கில் இராணுவ முகாம்கள் மற்றும் ஏனைய பாதுகாப்புத் தளங்கள் அகற்றம் மற்றும் மாற்றம் என்பன தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.

புலிகளின் சித்தாந்தம், பாடல்கள் என்பவற்றைப் பயன்படுத்தி பெருமெடுப்பில் மாவீரர் நாள் நிகழ்வுகளை நடத்துவதற்கு தலைமை வழங்குபவர்கள், தற்போதைய அரசாங்கத்தின் வெற்றிக்காக ஒத்துழைப்பு வழங்கியவர்கள் என யாழ்ப்பாணத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பாதுகாப்புக்கும், ஒற்றையாட்சிக்கும் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கும் அச்சுறுத்தல் உள்ளது. உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு அவர்களின் உறவுகளுக்கு உள்ள உரிமையை ஏற்கின்றோம். எனினும், அதற்கு அப்பால் சென்று பிரிவினைவாத அரசியல் இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கு எவரேனும் நடவடிக்கை எடுத்தால் அந்த விடயத்தில் தலையிட வேண்டியது பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளின் பொறுப்பாகும்" - என்றார். (அ-ம-44)

## யானை...

அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.


முகாமுக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு கடமையில் ஈடுபட்டிருந்தபோதே, யானையொன்று அவரைத் தாக்கியுள்ளது. படுகாயமடைந்த அவர் உடனடியாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். (அ-ம-110)

## டெங்கு...

ணிக்கை அதிகரித்துள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 45 ஆயிரத்து 448 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணமகள் தேவை

திருமணமாகாத (V) 1978 கேட்டை நட்சத்திரம் 3ம் பாதம் கிரக பாவம் 56 சைவம் மணமகனுக்கு திருமணமாகாத மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:

**075 617 8008**

## மணமகள் தேவை

யாழ். இந்து (P) புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 1987 ஆம் ஆண்டு உத்திரட்டாதி நட்சத்திரம் மீன இராசியில் பிறந்த சொந்தமாக வெல்டிங் வேலை செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

(CS/56791) J-1

**077 579 5422, 077 337 9686**

## காணி விற்பனைக்கு

இணுவில் Hospital க்கு முன்பாக காங்கேசன்துறை வீதியில் 10 அடி பாதையை முகப்பாகக் கொண்ட 1.50 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

(CS/29063) J-1

**077 313 8474**

## காணி விற்பனைக்கு

(நிலப்பரப்பு)

மருதனார்மடம் சந்திக்கு மிக அருகாமையில் காப்பெற் வீதியை முகப்பாகக் கொண்ட 1 1/2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட வணிக மற்றும் வீடு கட்டுவதற்கான காணித்துண்டுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இன்றே முந்துங்கள்.

(CS/56783) J-1

தொடர்பு:- **077 132 9682**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். நல்லூர் பாரதி சிலைக்கு அருகாமையில் 5 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு

(CS/56787) J-1

**077 969 8153, 0044 7958 323785**

## வேலையாட்கள் தேவை

நெல்லியடி, நல்லூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள புடைவைக் கடை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

(ஆண், பெண் இருபாலாரும் - நல்லூர், நெல்லியடியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

(cs.56795) (N-1)

**077 167 6846**

## உடன் தேவை

யாழ்நகரில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனமொன்றிற்கு முகாமைத்துவ உதவியாளர் (Clerk) பெண்கள் இருவர் உடன் தேவை. (யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள்)

தொடர்பு: **077 459 8440**

## சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

**077 717 2217**

## வீடு வாடகைக்கு

யாழ் நகர் பெருமாள் கோவிலடியில் சயன்ஸ் ஹோலுக்கு அருகில் வீடு வாடகைக்கு உள்ளது.

(CS/56790) J-1

**077 504 0714, 077 217 4741**

## பகிரங்க ஏல விற்பனை

### வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

### பதிவு இல - K/177 (21.07.1995)

வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான Np Vu – xxxx, Np Vc - xxxx ஆகிய Hero Honda Passion Pro உந்துருளிகளினை திருமுறிகண்டி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து 12.12.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 02மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளோம். இவ் உந்துருளிகளினை 02.12.2024ம் திகதி தொடக்கம் 10.12.2024ம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் 09மணி தொடக்கம் 4மணி வரை அலுவலகத்தில் பார்வையிடுவதுடன் ஏல விற்பனை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500.00 இனை செலுத்துபவர்கள் ஏலத்தில் பங்கெடுக்க முடியும்.

**தொலைபேசி இல : 0212060136, 0779483846**

**தலைவர்**

வட பிராந்திய பார ஊர்தி (லொறி) உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

(CS/28910) J-1

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் வீடொன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு

(CS/56785) J-1

**077 919 1529**

## காணி குத்தகைக்கு தேவை

நிறுவனமொன்றுக்கு யாழ் புறநகர் பகுதியில் இரண்டு பரப்பு அல்லது அதற்கு மேற்பட்ட காணி குத்தகைக்கு வேண்டும். (அரியாலை, நாவற்குழி, செம்மணி, நாவாந்துறை, காக்கைதீவு போன்ற இடங்கள்)

(CS/56788) J-1

தொடர்பு:- **077 919 1529**

## வடக்கில் PickMe Taxi

நீங்கள் வைத்திருக்கும் **முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், Car, Van, Lorry** அனைத்தையும் **PickMe Taxi** சேவையில் இணைத்து 100,000/- க்கும் அதிக வருமானம் பெறலாம்.

(CS/56792) J-1

**077 473 7737, 076 944 7737**

## வாடகைக்கு

பிறவுண் வீதியில் (நாவலர் வீதிக்கு அருகாமையில் அலுவலக பாவனைக்கு உகந்த இரண்டு மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: Agani Property Hub

**076 869 3111**

## MK Visa Work (Pvt)

**உங்கள் வெளிநாட்டு கனவை நினைவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள் பல வருடங்கள் நம்பகமான சேவை பல உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனை**

**(மாணவர் விசா, விசிட் விசா, வேலை விசா)**

### UK- Work Permit இரண்டு மாதங்களில்

- **போர்த்துக்கல் வதிவிட** Visa 5 Year
- **கனடா விசிட் விசா**
- **பிரான்ஸ், இத்தாலி விசிட் விசா**
- **கங்கேரி** Work Permit
- **ருமேனியா** Work Permit
- **அமெரிக்கா** Work Permit
- **நிராகரிக்கப்பட்ட விசாக்களுக்கான தீர்வுகள்**
- **சகல எம்பசிகளுக்கான** Appointment

**பின்வரும் இடங்களில் எமது விசா குழுவுடன் இணைந்து சிறப்பாக செயற்படக்கூடிய நபர்கள் பணிக்கு தேவை.**

| | | |
|---|---|---|
| 01. யாழ்ப்பாணம் | 02. கிளிநொச்சி | 03. வவுனியா |
| 04. மன்னார் | 05. முல்லைத்தீவு | |

(cs.29064) (N-1)

தொடர்புகளுக்கு: **Whatsap : 074 035 2940**
**+ 24 430 3003**
**076 669 4693**

(cs 29064) (N-1)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 20 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை **(Beach)** முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம்: - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு: ஜெயம்**

**077 814 7389**
**077 986 5457**

(cs.11944) (N-1)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | கார்த்திகை 16 | ஞாயிற்றுக்கிழமை (01.12.2024) | சிகரம் :230

நெருப்பழல் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும்— பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாரும் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

— நாலடியார்




# மாவீரர் நாள் 2024: மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்

நிலாந்தன்

நான்கு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில், தூதரகமொன்றின் இரவு விருந்தில் கலந்துகொண்டேன். எனது மேசையில் மூத்த ஊடகவியலாளர்கள் இருவரும் ஊடக முதலாளி ஒருவரும் அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்கும் கட்சி ஒன்றின் முக்கியஸ்தரும் அமர்ந்திருந்தார்கள். எங்களோடு இருந்து கதைத்துக்கொண்டிருந்த ஒரு ராஜதந்திரி என்னைப் பார்த்துச் சொன்னார் "எல்லா ஈழத் தமிழர்களின் மனதிலும் ஒரு நாடு என்ற கனவு உண்டு" இப்படிக் கூறிவிட்டு அருகில் இருந்த அந்தக் கட்சிப் பிரமுகரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டு சொன்னார் "இதோ இவருடைய தலைவர் அமைச்சராக இருக்கலாம். ஆனால் அவரிடமும் அந்தக் கனவு உண்டு"

ஆம். அந்தக் கனவு எல்லா ஈழத் தமிழர்களிடமும் இருப்பதால்தான் அந்தக் கனவைக் கட்டியெழுப்பிய தியாகிகளை அவர்கள் எல்லா இடர்களின் மத்தியிலும் நினைவு கூர்கிறார்கள்.

இம்முறை மாவீரர் நாளையொட்டி பொலிஸார் கடந்த ஆண்டுகளில் செய்வதைப்போல நீதிமன்றத்துக்கு போய் தடை உத்தரவுகளை பெற்றுக் கொண்டு வரவில்லை. எனினும் அம்பாறையில் பொலிஸார் சில நெருக்கடிகளைக் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் தடை செய்யப்பட்ட ஒரு இயக்கத்தின் நினைவுச் சின்னங்களுக்குத் தடை என்று அறிவித்திருந்த போதிலும், பெரும்பாலான சிறிய மற்றும் பெரிய தமிழ்ப் பட்டினங்களில் மாவீரர்களின் பாடல்கள் அனைத்

06

புதுமையும் எழிலும் பொலியும் பலசுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பத்து வயதுப் பாலகர்களுக்கு பலப்பரீட்சை அவசியமா?

பேராசிரியர். ம. இரகுநாதன்

தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற புலமைப்பரிசில் பரீட்சையானது வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி பெறுவதற்கான வாய்ப்பை வழங்குகிறது என்றும், தேசிய பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தருகின்றது என்றும் கூறப்படுகின்றது. இதற்காக பாடசாலைகளில் முதலாம் ஆண்டிலிருந்தே கடுமையான பயிற்சி வழங்கப்படுகிறது. துள்ளித்திரிகின்ற பருவத்துப் பள்ளிச் சிறார்களுக்கு பருவத்திற்கு மிஞ்சிய பயிற்சி வழங்கப்படுவதால் அவர்களின் மனவளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்பது உளவியல் அறிந்தவர்களுக்குப் புதிய செய்தியாகாது.

*"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்"*

என்ற வள்ளுவரின் வாக்கை இவ்விடத்தில் நினைத்துப் பார்க்கமுடிகின்றது. இவர்களுக்கு வழங்கப்படுகின்ற வினாத்தாளில் உள்ள வினாக்கள் முழுவதும் பாடத்திட்டத்தில் உள்ளனவா? என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும். அண்மைக்காலத்தில் பத்திரிகைகளில் பரவலாகப் பேசப்பட்ட விடயம் 2024 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளில் உள்ள வினாக்கள் முன்கூட்டியே வெளியாகி விட்டன என்ற சந்தேகமே. இது உண்மையாக இருக்குமானால் இச்சம்பவம் இம்முறை மட்டும் தானா நடந்தது? அல்லது இம்முறைதான் இது தெரியவந்ததா? என்ற வினா எழுவது தவிர்க்கமுடியாததே. வினாத்தாளில் பாடப்பரப்பினுள் அடங்குகின்ற வினாக்களை எவரும் திருட்டுத்தனமாகப் பெறவேண்டிய அவசியம் ஏற்படாது. இதற்கப்பால் வருகின்ற வினாக்கள் மாணவர்களை வதம் செய்பவை. இவற்றைத் திருட்டுத்தனமாகப் பெற்றவர்கள் பரீட்சையில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்று தமது சாமர்த்தியத்தை வெளிக்காட்டுவர். இதனை அறியாத வினாத்தாள் தயாரிப்பாளர்கள், மாணவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல எனக்கருதி மறுமுறை வினாக்களை மேலும் கடினமாக்குகின்றனர். இதனால் உயர்தர மாணவர்களுக்கு ஒலிம்பியாட் பரீட்சையில் வருவது போன்ற வினாக்களும், நிர்வாக சேவைப் பரீட்சைக்கு பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் வினாக்களை ஒத்த வினாக்களும், பச்சைக் குழந்தை களுக்கு வழங்கப்படுகின்றன.



புலமைப்பரிசில் பரீட்சைதக்காக பாடசாலைகளில் முதலாம் ஆண்டிலிருந்தே கடுமையான பயிற்சி வழங்கப்படுகிறது. துள்ளித்திரிகின்ற பருவத்துப் பள்ளிச் சிறார்களுக்கு பருவத்திற்கு மிஞ்சிய பயிற்சி வழங்கப்படு வதால் அவர்களின் மன வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது என்பது உளவியல் அறிந்தவர்களுக்குப் புதிய செய்தியாகாது.

இது மாணவர்களுக்கு மனஉளைச்சலைத் தந்து பெரும் பாதிப்பையே ஏற்படுத்துகின்றது. 5ஆம் வகுப்பு மாணவர்கள் குறித்த நேரத்தில் இவ்வாறான வினாக்களுக்கு சரியான விடையைக் காண்பதென்பது மிகவும் கடினமானது. ஒரு சில மாணவர்கள் இதற்குப் புறநடையாக இருந்துவிட்டால் அவர்கள் வாழ்த்தப்படவேண்டியவர்கள். எவ்வாறாயினும் சராசரி மாணவர்களுக்கு இப் பரீட்சை எந்த வகையிலும் பொருத்தமானதாகவில்லை. மேலும் பாடசாலை அனுமதிக்காக இப்பரீட்சையை எதிர்கொள்பவர்கள் நகரப்புற மாணவர்களே. நகரப்புறங்களிலேயே தரநிர்ணயம் செய்யப்பட்ட பாடசாலைகள் அதிகம் உள்ளன.

இதனால் தேசிய பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்காக புலமைப்பரிசில் பரீட்சை பயன்படுத்தப்படுகின்றது. தேசியப் பாடசாலை முறைமை மாணவர்களை மட்டுமன்றி ஆசிரியர்களையும் ஒரு வகையில் பாதிக்கின்றது. தேசியப் பாடசாலையில் கற்பிக்கின்றவர்கள் ஏனைய பாடசாலைகளில் கற்பிக்கின்றவர்களிலிருந்து தம்மை வேறுபடுத்துவதில் சில சிக்கல்கள் இல்லாமல் இல்லை. அது வேறு விடயம். கிராமப்புறங்களில் மாணவர்களுக்கு பாடசாலைத் தெரிவு என்பது சிக்கலானதாக இல்லை. அங்கு ஒரு சில பாடசாலைகளே இருப்பதால் எல்லா மாணவர்களையும் அவை உள்வாங்க வேண்டிய நிலையே உள்ளது. அடுத்து உதவித்தொகை பெறுபவர்களைப் பொறுத்தவரையில் நகரப்புறப் பாடசாலைகளில் சித்திபெறுபவர்களில் பெரும்பாலானவர்கள் அரச ஊழியர்களின் பிள்ளைகளே என்பதால் அவர்கள் உதவித் தொகையினைப் பெறமுடிவதில்லை.



இதனாலும் வறிய மாணவர்களின் வாய்ப்பு இழக்கப்படுகின்றது. எனவே இப்பரீட்சை சாதாரணமான குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், பணக்கார வர்க்கத்தின் நலன்வும் அமைவதால் இது இன்னும் தொடர வேண்டுமா? என்று உரியவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அண்மையில் புதிய பிரதமரின் குரல் எட்டாம் வகுப்புக்கு முன்னர் போட்டிப் பரீட்சைகள் அவசியமில்லை என்ற தொனியில் ஒலித்திருப்பது சாதாரண மக்களுக்குப் பெரிதும் ஏற்புடையதே. புதிய அரசு இதனை விரைந்து செயற்படுத்துமாக இருந்தால் சின்னஞ் சிறுவர்களுக்கு சித்திரவதைக் கூடமாகப் பாடசாலைகளும், வீடுகளும் அமையாமல் அவர்களின் இன்பமான வாழ்க்கைக்கு வழி பிறக்கலாம். அந்த நம்பிக்கையோடு அவர்கள் காத்திருக்கட்டும். ■



## ஆதாம்

நட்சத்திரங்களின் மொழியை
பறவைகளின் கீச்சொலியாய்
காற்று மொழிபெயர்க்க
சிந்துகின்ற இனிமை
பூக்களில் தேனாய்
தேங்கி கிடக்கின்ற
ஒரு நாளில்
கடவுள் ஆதாமை படைத்தார்.

ஆதாமுக்கு உலகமும்
உலகுக்கு ஆதாமும் புதியவர்கள்.

அந்நாளில் ஆதாம்
உலகின் ஒற்றைத் தனியனாய்
என்ன எண்ணியிருப்பான்.
பூந்தேனை பருகி மயங்கியவன்
முட்கள் வருத்துவதை
எங்கனம் தவிர்ப்பதென
புரியவில்லை.

அருவியின் பரிசுத்தம்
கடவுளாய் தெரிந்தது.
காட்டாற்றின் குரோதம்
எப்படிப்பட்டதென தெரியவில்லை.

கனிச்சாற்றின் இனிமை
தேவரசமாய் சுவைத்தது.
நஞ்சுக்கனியை விலக்குவது
எவ்வாறென விளங்கவில்லை.
இப்படியெல்லாம் இருந்தது
ஆதாமின் முதல் நாள்.

தனக்குத் துணையாய்
இன்னொரு ஆதாமையே
எதிர்பார்த்தான்.

ஏவாள் வந்து வீழ்வாள் என்பது
உலக நியதி கோட்பாட்டின்
ஒற்றை விசை.

கடவுள் அழகிய உலகின்
வனப்பைக் கற்றுக் கொடுத்தார்.
சாத்தானோ விலக்கிய
கனியினால்
வாழக் கற்றுக் கொடுத்தான்.

எனில்
ஆதாமின் ஞானகுரு
ஆண்டவரா சாத்தானா?

ஆதாம் ஆராதிக்க வேண்டியது
விளைநிலத்தின் அழகையா?
விலக்கப்பட்ட கனியையா?

**கவிஞர் வேல். லவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழத்தெரியாத வாக்காளப் பெருமக்களே!



*வணக்கம்.*

எலக்சனுக்குப் பிறகுதான் தமிழர் அரசியல் பரப்பு சூடுபிடிச்சிருக்கு. ஒருத்தரும் இப்பிடி வரும் எண்டு நினைக்கேல்லை. கனபேரைக் காணேல்லை எண்டு சனம் தேடுது. சுனாமி அடிச்ச மாதிரி ஒரு பேரலை. தமிழர் பரப்பை அடிச்சு நொருக்கி அதுக்குள்ளாலை பெருஞ்செய்தி ஒண்டை வெளியிலை கொண்டு வந்திருக்கிது. "சனத்தை இனிமேலும் பேய்க்காட்டாதையுங்கோ" எண்டதுதான் அந்தச் செய்தி.

எலக்சனுக்குப் பிறகு தான் சிலருக்கு விடிஞ்சிருக்கு. அதுக்குப் பிறகுதான் பல்லுத்தீட்டி முகம் கழுவி அவை எப்பவும் பிந்தித்தான் பஸ்ஸைப் பிடிச்சு வருவினம். கேட்டால் தேசியம் உடைஞ்சு போச்சுது ஒட்டப்போறம் எண்டு மறுமொழி சொல்லுவினம். எப்பவும் உடைஞ்சதை ஒட்டுறதுதான் அவையின்ரை வேலை. தமிழ்க் கட்சிகளை ஒட்டவேணும், அவையளுக்கிடையிலை ஒரு பரஸ்பர நம்பிக்கையையும், ஒற்றுமையையும் வளர்க்க வேணும் எண்டு ஓடித்திரிஞ்சவை, முதலே முயற்சி செய்து உடையாமல் அதைப் பாதுகாக்க வேணும் எண்டு நினைக்கிறதில்லை. இப்பிடி ஒட்டுறம், வெட்டுறம் எண்டாத்தான் புலம்பெயர் தேசத்திட்டை இருந்து வறுகலாமாம்.

பொது வெளியிலை தமிழற்றை சுயம் எப்பிடி இருக்கும் எண்டது எல்லாருக்கும் தெரியும். அவை எப்பிடி எல்லாம் நடந்து கொள்ளுவினம் எண்டும் வடிவாத் தெரியும். அப்ப ஒட்டிற வேலையைத் தற்காலிகமானதெண்டு நினைக்காமல் எலக்சன் வர முன்னம், அதுவும் பல வருஷத்துக்கு முன்னம், தமிழ் பேசுற மக்கள் அத்தனைபேற்றை நன்மை கருதி ஒரு நீண்டகாலத் திட்டமா அதைத் தொடக்கியிருக்கவேணும்.

இது என்னெடாவெண்டால் தமிழருக்குத் தமிழ்த் தேசியம் எண்ட சாட்டிலை படங்காட்டுற வேலையெல்லோ நடந்திருக்கு! கர்ணன் சாகப்போற நேரத்திலை கிருஷ்ணபரமாத்மா "உள்ளத்தில் நல்ல உள்ளம்" எண்டு படிச்சுக் கொண்டு வாற மாதிரி நாடகம் போட்டிருக்கிறியள். இப்பிடி ஒரு சிக்கல் வரேக்கைதான் அதைக் காட்டிக் காசு வேண்டுறது உங்களுக்கு ஒரு பிழைப்பாப் போச்செண்டு நான் நினைக்கிறன். அதுக்கு உதாரணம் எண்டு பலதைப் போன எலக்சனிலை கண்டனாங்கள் தானே. "நக்குண்டார் நாவிழார்" எண்ட மாதிரி கோடியைக் கண்டவை எப்பிடி வந்து தேசியம் கதைக்கலாம்?

ஒண்டை மட்டும் அறிஞ்சு கொள்ளுங்கோ. இஞ்சை தேசியம் ஒண்டும் சாகேல்லை. வெயில் காலத்திலை அட்டை, செட்டியட்டை, பேனை அட்டை எல்லாத்தையும் அந்த இனம் அழியக்குடாது எண்டு நிலத்துக் அடியிலை உறங்கு நிலைக்குக் கடவுளாலை அனுப்பி வைக்கிற மாதிரி தமிழ் மக்களாலை "தமிழ்த் தேசியம்" உறங்கு நிலைக்கு அனுப்பப்பட்டிருக்கு. தமிழ் அரசியல்வாதியளுக்கு ஐஞ்சு வருஷக் கடூழியச் சிறைத் தண்டனையைத் தமிழ் மக்கள் கொடுத்திருக்கினம். அந்தத் தண்டனைக் காலத்திலை அவை தங்கடை நன்னடத்தையைக் காட்டித் தண்டனைக் காலத்தைக் குறைச்சுக் கொண்டு வெளியிலை வரலாம். வந்து புதுப்பொலிவோடை அரசியலைச் செய்யலாம். அந்தத் தண்டனைக் காலத்திலை கனபேர் காலாவதியாகவும் போகக் கூடும். கன பேர் "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" எண்ட மாதிரி ஒதுங்கக் கூடும். அப்ப தமிழ் மக்கள் தமிழ்த் தேசியப் பரப்பைக் கழுவித் துடைச்சு அதுக்குத் தக்க ஆக்களைக் கொண்டுவருவினம். தொடர்ந்து உங்களைப்போலை சந்தர்ப்பவாத அரசியலைச் செய்து கொண்டு "பொங்கலுக்கு வரும், தீபாவளிக்கு வரும்" எண்ட மாதிரித் தங்களை வைச்சிருக்க வேண்டாம் எண்டதைச் செய்தியாச் சொல்லி இருக்கினம். அதுக்குப் பிறகும் வெட்கமில்லாமல் பேஸ்புக்குக்குள்ளாலையும், யூரியூப்புக்குள்ளாலையும் வந்து சனத்தைப் பேய்க்காட்டிறியள். இன்னும் தமிழரை ஒரு "பெப்பேக்கள்" எண்டுதான் நினைச்சுக்கொண்டிருக்கிறியள்.

ஜனாதிபதி எலக்சனிலை தமிழர் சார்பிலை ஒரு பொதுவேட்பாளரை நிறுத்துவம் எண்டு வெளிக்கிட்டவையளை ஏதாவது செய்ய விட்டிருக்கலாம். அதுக்கும் அவையளை விடேல்லை. அதுக்கையும் மூக்கை நோண்டினியள். அவையளையும் சுதந்திரமா, சரியா இயங்கவிடாமல் சுயலாபத்தைத் தேடினியள். அதையும் நாறப் பண்ணிப்போட்டியள். வெளியாக்களிட்டைக் காசையும் வேண்டிச் சில வழிச்சுப் போட்டுக் கணக்கையும் நேரவழிக்குக் குடுக்கேல்லையாம் எண்டு கோயிலடியிலை கதைச்சவை. அது சரியோ, பிழையோ எண்டு எனக்குத்தெரியாது.

அதை விடுவம். இப்ப வந்த நாடாளுமன்றத் தேர்தலிலை தன்னும் முன்னம் விட்ட பிழையளைத் திருத்தி ஒழுங்கான ஆக்களைப்போட்டு தமிழரசு குறிப்பா வடபகுதித் தமிழற்றை மானத்தைக் காப்பாற்றி இருக்கலாம். ஆனால் அவை தங்களுக்கை இருந்த "இசக்குப்பிசகை" வைச்சு அதைச் செய்யேல்லை. அவையின்ரை போட்டி வெளியிலை இல்லையாம். தங்கடை கட்சிக்குள்ளை எண்டுதான் கதை. குடும்பத்துக்கை நடக்கிற வேலிச் சண்டையைப்போலை. அதிலை வெண்டது வாத்தியார்தான். ஆனால் கிழக்கிலை புத்தியா நடந்து அதைச் செய்திருக்கினம்.

இந்த விசயத்திலை புலம்பெயர் தேசத்திலை இருக்கிற தமிழரும் கனக்கப் பிழையளை விட்டிட்டினம். புலம்பெயர் தேசத்திலை இருக்கிற சிங்களவர்தானாம் இந்த முறை வித்தியாசமா யோசிச்சு, ஒற்றுமையா நிண்டு அநுரவைக் கொண்டுவந்தவையாம். ஆனால் எங்கடை தமிழர் என்ன செய்தவை. அங்கையும் பல பிரிவுகளாக நிண்டு கொண்டு காசைச் சேர்த்து இஞ்சையும் பல பிரிவுகளை உருவாக்கி கூட்டைத் தெறிக்கப் பண்ணி அநுரவுக்கு மூண்டு சீற்றைக் குடுத்து அவையளை வலுப்படுத்தினதேயொழிய, புதிசா ஒண்டும் செய்யேல்லை எண்டதுதான் பலரின்ரை மனக்கிலேசம்.

ஒழுங்கா இருக்கவேண்டியவை ஒழுங்கில்லாமல் இருந்தால் ஒழுங்கில்லாதவைதான் சபையை நடத்துவினம் எண்டதுக்கு ஒரு நல்ல உதாரணம், எங்க இருக்கோணுமெண்டது தெரியாமல் ஒருத்தர் எதிர்க்கட்சித்தலைவரின்ர கதிரையில இருந்துகொண்டு நடத்தின கூத்து. அதைப் பாக்கேக்கை எனக்கு சின்ன வயதிலை முதல்முதலா பள்ளிக்கூடம் போனதுதான் ஞாபகத்துக்கு வந்திது. அதை ஆச்சி சொன்னவா, 'நான் பள்ளிக்கூடம் போன அண்டே கதிரைக்கு அடிபிடிப்பட்டனானாம். அதுவும் முன்னுக்குத்தான் இருப்பன் எண்டு அழுதுகுளறி வாத்தியாருக்கும் துப்பினானாம்'.

அதை நான் சின்ன வயதிலை செய்ததாலை பிரச்சினை இல்லை. இது வயது வட்டுக்கை வந்தாப் பிறகு செய்தால்....??? புத்தகத்தைப் படிக்கிறது மட்டும் தான் படிப்பில்லை. முதலிலை தாற போமை வாசிச்சு வடிவா நிரப்பத் தெரிய வேணும். தான் ஒரு சைவனாக இருந்து கொண்டு புத்தன் எண்டு 'போர்மை' நிரப்பிறவனை நம்பின சனத்தைச் செருப்பாலை அடிச்சா என்ன? அதோடை மானம் மரியாதையோடை நாகரிகமா எப்பிடி வாழுவேணும் எண்டதும் சமூகத்தின்ரை பிரதிநிதியா எப்பிடி நடந்து கொள்ளவேணும் எண்டதும் தான் முக்கியமான படிப்பு.

இப்படிக்கு

அப்பாவி அன்னமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களும் கார்ட்டூன்களும்

கு.லோகிதா
இரண்டாம் வருடம்,
ஊடகக் கற்கைகள் துறை

“இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்” போன்ற சிறுவர்களை முன்னிறுத்திய மகுட வாசகங்கள் எல்லாம் வெறும் வாசகங்களாக மட்டுமின்றி செயல் வாதங்களாக முன்னெடுப்பதற்கான காலம் வாய்த்துக்கொண்டிருக்கிறது. இவ்வுலக மானது சிறுவர்களால் இணைந்து பிணைக்கப் பட்டுள்ளதால் அவர்களைப் பாதுகாக்கவேண்டியது மிகமுக்கியமான கடமை.

பல்வேறு தொழில்நுட்பங்களிலாலும் இணையங்களாலும் மூழ்கிபோன நவீன தொழில்நுட்ப உலகம், பல்வேறு மனிதர்களையும் ஆட்கொண்டு வருவதுடன் அது சிறுவர்களையும் விட்டு வைத்து விடவில்லை. தாத்தா பாட்டியின் அரவணைப்பில் இருந்து அவர்களது கதைகளையும் பாடல்களையும் தாயின் “நிலா நிலா ஓடி வா…” எனப் பாடல்களை எல்லாம் சிறுவர்கள் மறந்து தற்போது மின்னணு ஊடகங்களின் மடியில் உறைகின்ற காலமாக போய்விட்டது.

கடந்த காலங்களில் சில நடத்தை மாற்றங்கள் காரணமாகவும், பெற்றோர் வேலைகளுக்குச் செல்வதாலும் பிள்ளைகள் நேரத்தினை கழிப்பதற்குமுடியாத காரணங்களினால் அவர்களை சமாளிப்பதற்காக தொலைக்காட்சி, தொலைபேசிகளில் கார்ட்டூன்களை கொடுத்து பழக்குகிறார்கள். போகப் போக இந்தப் பழக்கத்துக்கு சிறுவர்கள் அடிமைகளாகி, பின்னர் நாளும் பொழுதும் அந்த உலகத்துக்குள்ளேயே மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகில் கிட்டத்தட்ட 80% சிறுவர்கள் கார்ட்டூன்களில் இவ்வாறு மூழ்கியுள்ளனரென்று தரவுகள் சொல்கின்றன. 1,800 களிலேயே அறிமுகமான இந்தக் கார்ட்டூன்கள், பிற்பட்ட காலங்களில் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதுடன், நவீன தொழில்நுட்பங்களாக அனிமேஷன்கள், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றைப் பயன்படுத்தி குழந்தைகளை கவரும் விதத்தில் தகவமைத்து, அவர்களை தம்மோடு கட்டிப்போடும் தந்திரத்தை இவை கொண்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் கார்ட்டூன்கள் சித்திரக்கதைகளாக புத்தகங்களாகவே வந்தன. பின்னர் அவை ஒளி, ஒலியுடன் திரைப்படங்களாகவும், தொடர்களாகவும் உருமாற்றம் பெற்றன, இதனால் தொலைக்காட்சிகளில் கார்ட்டூன்கள் முக்கியமான இடத்தைப் பிடித்தன. கார்ட்டூன்களை ஒளிபரப்பிவென தனியான தொலைக்காட்சி அலைவரிசைகளும் உருவாகின. ‘கார்ட்டூன் நெட்வேர்க்’ ‘டிஸ்னி’ என்பன அவற்றில் முக்கியமானவை. அலைபேசி, இணையம், சமூக வலைத்தளங்கள் என்பவற்றின் வரவுக்குப் பின்னர் கார்ட்டூன்களின் தளமும் மாறியது.


சிறுவர்களின் மையமாகக் கொண்டு யூரியூப் (youtube) நெட் பிளிக்ஸ் (Netflix), டிஸ்னி பிளஸ் (Disney+) ப்ரைம் வீடியோ (prime vedio) போன்ற தளங்கள் சிறுவர்களுக்காக கார்ட்டூன்களை தயாரித்து வெளியிடத் தொடங்கின. அவற்றில் டிஸ்னி பிளஸ் (Disney+) தளமானது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை 7.6% சிறுவர்கள் அதிகமாக பார்வையிட்ட தளமாகக் காணப்படுகின்றது. அதனை அடுத்ததாகவே யூரியூப் காணப்படுகின்றது. அது 19.33% வீதமான சிறுவர் பார்வையாளர்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளில் 1 தொடக்கம் 2 மணித்தியாலங்களில் 40% சிறுவர்கள் கார்ட்டூன்களை இணையங்களில் பார்வையிடுவதுடன், தினந்தோறும் 65.2% சிறுவர்கள் தங்கள் பொழுதில் ஏதோ ஒருவகையில் கார்ட்டூன்களைப் பார்த்து வருவதாகவும் தரவுகள் சொல்கின்றன.

சிறுவர்கள் கார்ட்டூன்களுடன் அதிக நேரத்தைச் செலவிடுவதால், அவர்களுக்கு பல்வேறு விதமான பிரதிகூலங்களும் ஏற்படுகின்றன. அவற்றில் கண் பார்வையானது குறைவடைந்து போவதற்கான வாய்ப்பும் காணப்படுகிறது. ஏனெனில் இவர்கள் தங்களுடைய நாள் பொழுதினை அதிகமாக தொலைபேசியுடனும் தொலைக்காட்சிகளினுடனும் கழித்து வருவதனால் அவர்களுடைய பார்வைத்திறன் குறைவடைந்து செல்வதற்கே அதிக வாய்ப்புகளுண்டு.

மூளை வளர்ச்சியைக் குறைவடையச் செய்வதற்கும் இந்தக் கார்ட்டூன்கள் ஒரு காரணமாக உள்ளன. ஏனெனில் கார்ட்டூன்களை பார்க்கின்றபோது அவர்கள் வெளிச்சூழலை மறந்தும் ஒன்றித்துப் போவதால் கார்ட்டூன்களில் வெளிப்படும் மனநிலை இவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும். அதனோடு எந்நேரமும் கார்ட்டூனே கதியென்று மாறுவதால், வெளியுலகம் தெரியாதவர்களாக, வேறு முயற்சிகளில் ஆர்வம் காட்டாதவர்களாகவும் இவர்கள் உருமாறக்கூடும். பெரும்பாலான கார்ட்டூன்கள் வன்முறைக்காட்சிகளைக் கொண்டிருப்பதால், சிறுவர்களிடம் இயல்பாகவே வன்முறை எண்ணம் வளரும் அபாயமும் உண்டு. இன்னும் சில சந்தர்ப்பங்களில் கார்ட்டூன்களைப்போல தாமும் செய்து பார்க்கும் ஆவல் அவர்களிடம் எழுவதால், விபரீதமான காரியங்களில் அவர்கள் இறங்கக்கூடும். சக்திமான், சுப்பர்மான், ஸ்பைடர்மான் போன்ற கார்ட்டூன்களைப் பார்த்து, அதில் வரும் பாத்திரங்களின் வீரதீரச் செயல்களைப்போல தாமும் செய்யமுயன்று சிறுவர்கள் சிலர் உயிரைவிட்ட சம்பவங்களும் நடந்ததுண்டு.

மற்றும் சில கார்ட்டூன்களில் நகைச்சுவையை புகுத்துவது என்ற பெயரில் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது சிறுவர்களின் உரையாடலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துவதாக அமைந்துவிடுகிறது. பெற்றோர், குழந்தைகளின் நச்சரிப்பிலிருந்து தப்பித்து தமது வேலைகளில் ஈடுபடுவதற்காக அவர்களை கார்ட்டூன்கள் பார்க்க அனுமதிக்கின்றனர். நாள் முழுவதும் பெற்றோருடன் செலவழிக்கவேண்டிய நேரத்தை குழந்தைகள் தொலைக்காட்சியோடும், தொலைபேசியோடும் செலவழிக்கின்றனர். இதனால் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையிலான புரிந்துணர்வு அற்றுப்போகிறது. இந்த நிலையில் உளரீதியான பாதிப்புகளையும் அவர்கள் சந்திக்க நேர்கிறது. அதே சமயம் வாசிப்புப் பழக்கத்தை குழந்தைகளிடையே உருவாக்குவது முயற்கொம்பாகிவிடுவதோடு, சரியான உணவு மற்றும் உறக்கம் இன்றி குழந்தைகளுக்கு உடல்நலக்குறைபாடுகளும் ஏற்படுகிறது.

சிறுவர்கள் மத்தியில் வேரூன்றியுள்ள கார்ட்டூன் பழக்கமானது தீமைகளோடு சேர்த்து, சில நன்மைகளையும் ஏற்படுத்தவே செய்கிறது. அதாவது தாய்மொழி உட்பட ஏனைய புதியமொழிகளையும் முக்கியமாக ஆங்கிலமொழியின் வார்த்தைப் பிரயோகங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள். அத்தோடு, நவீன தொழில்நுட்பங்களை அறிதல், புதியனபுரிதலினூடாக குழந்தைகளின் கற்பனைத்திறன் அதிகரிக்கிறது. எனினும் இன்றைய காலகட்டத்தில் சிறுவர்களிடையே நோய் போல் பரவியுள்ள கார்ட்டூன் பார்வையிடும் பழக்கமானது அவர்களின் எதிர்காலத்தை சிதைக்கக்கூடும் என்பதால் இந்த ஊடகங்கள் எனும் மாயை உலகிலிருந்து அவர்களை வெளிக்கொண்டுவருவது பெற்றோரின் கட்டாயக் கடமையாகும். குழந்தைகளின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் பயன்மிக்கதாகவும், ஆரோக்கியமானதாகவும் மாற்ற பெற்றோர் தம்மை அர்ப்பணிக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ கோகுலராகவன்

# சேபால:

# இத்தாலியை நடுங்கவைத்த தனியொருவன்

சேபால எக்கநாயக்க.
இந்தப் பெயரை இலங்கையர்கள் இலகுவில் மறந்து விடமுடியாது.

சேபால 1982 இல் இத்தாலி நாட்டின் விமானம் ஒன்றைக் கடத்தியதால், உலகறியுமளவுக்கு பிரபலமானவர். இலங்கையில் மாத்தறை மாவட்டத்தில் காரதோட்ட என்னுமிடத்தில் பிறந்தவர் சேபால. தகப்பனிடம் அடி வாங்கியதால் வீட்டை விட்டு ஓடி பாடசாலை அதிபர் வீட்டில் ஆறு மாதம் தங்கினார். 1972 இல் ஜேர்மனிக்கு இடம் பெயர்ந்தார். அங்கே 1977 இல் இத்தாலி நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு இத்தாலிக்குச் சென்றார்.





இந்தநிலையில் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு 'ப்றி'(Free) என்று பெயர் வைத்தார். சேபாலவுக்கு சுதந்திரத்தில் அவ்வளவு விருப்பம். இப்படியிருக்கையில், சேபாலவின் இத்தாலி விசா முடிவடைந்தது. சேபால விசா நீடிப்புப் பெற விண்ணப்பித்தார்.

ஆனால், இலங்கையிலுள்ள தமது தூதரகமே இந்த விசாவை வழங்கமுடியும் என்று கூறி சேபாலவை இலங்கைக்கு அனுப்பி விட்டது இத்தாலிய அரசு.

கிட்டத்தட்ட ஆறு வருடமாக சேபால இத்தாலிக்கான விசாவைப் பெற முடியவில்லை.

இத்தாலி தூதரகத்துக்கு சேபால தினமும் அலைந்ததுதான் மிச்சம். மனைவியையும், மகனையும் பார்க்கமுடியவில்லை என்ற ஏக்கம் சேபாலவை கடும் கோபத்துக்கு ஆளாக்கியது. இரண்டு மூன்று நண்பர்களோடு சேர்ந்து இத்தாலி விமானத்தை கடத்த அவர் திட்டம் தீட்டினார். இந்தியா சென்று இத்தாலி விமானத்தில் பாங்கொக் போகத் திட்டமிட்டார். இடையில் விமானத்தை கடத்த வேண்டும். இவை எல்லாம் சேபாலவுக்கு சாதாரண விடயங்கள்.

சிறு வயது முதல் அவருக்கு இப்படியான ஆர்வக் கோளாறுகள் அதிகம். இத்தாலிக்குச் சொந்தமான (Alitaliya Boeing 747) விமானத்தில்
ஏறிக்கொண்டார்.

பயண இடை நடுவில் விமானிக்கு சேபால காகிதத்துண்டில் பின்வருமாறு எழுதி அனுப்பினார். "என்னிடம் வெடிகுண்டு இருக்கிறது. விமானத்தைக் கடத்துகிறேன். எனது கட்டளைப்படி செயற்படவும்."

(ஆனால்சேபாலவிடம் வெடிகுண்டு இருக்கவில்லை என்பது யாருக்கும் தெரியாது. பருத்த கோர்ட் மட்டும் அணிந்திருந்தார்.)




பயந்து போன விமானி சேபாலவின் கட்டளைப்படி இயங்கத் தொடங்கினார்.

விமானம் கொங்கொங்கில் தரை இறக்கப்பட்டது. விமானத் தொலைபேசி முலம் தனது மனைவியையும் மகனையும் தன்னிடம் ஒப்படைக்குமாறும், மூன்று இலட்சம் அமெரிக்க டொலரை பணயப் பணமாக தரும்படியும் சேபால அறிவித்தார். விமானத்தில் இருந்த முன்னூற்றி நாற்பது பயணிகள் வெளியேறாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பயந்து போன இத்தாலி அரசு சேபாலவின் மனைவியையும், மகனையும் மூன்று இலட்சம் அமெரிக்க டொலரையும் கொடுத்து விமானத்தை விடுவித்தது.

சேபால வெற்றிப் பெருமிதத்தோடும் மனைவி, மகன் மற்றும் பெருந்தொகை பணத்தோடும் இலங்கை திரும்பினார். (இலங்கையில் அவரது சாதனையை புகழ்ந்து செங்கம்பள வரவேற்பு செய்யப்பட்டதாகவும் ஒரு கதை உண்டு)

இனி அவர் ராஜவாக வாழலாம் அல்லவா?

ஆனால் ஒரு வாரத்தில் எல்லாம் தலை கீழாக மாறியது.

இத்தாலி அரசு இலங்கை அரசைக் கண்டிக்கத் தொடங்கியது. இலங்கை அரசுக்கு இராஜதந்திர நெருக்கடிகள் பல்வேறு தரப்பில் இருந்து வரத்தொடங்கின.

இத்தாலியின் இலங்கைக்கான தூதுவர் பின்வரும் முறைப்பாடு ஒன்றை கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் பதிவு செய்தார். "சேபால எக்கநாயக்க என்பவர் இத்தாலி நாட்டின் விமானத்தை கடத்தி மூன்று இலட்சம் டொடலரை கொள்ளை அடித்து விட்டார்." என்பதே அந்த முறைப்பாடு. அத்தோடு உலக விமானிகள் சங்கத்தினரும் "இலங்கையில் எந்த விமானத்தையும் தரையிறக்கமாட்டோம் " என அறிக்கை வெளியிட்டனர்.

இவை இலங்கை அரசுக்கு அவமானமாகவும், நெருக்கடியாகவும் போய்விட்டது.

அவசர அவசரமாக இலங்கை அரசு சேபாலவை கைது செய்ய வேண்டி வந்தது.

சேபாலவின் கனவு அவர் கண்முன்னே கலைந்தது.

சேபாலவிடம் எஞ்சி இருந்த பணயப் பணமான 299,700 டொலர் பறிமுதல் செய்யப்பட்டு இத்தாலி அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

சேபால முன்னூறு டொடலரை விடுதியில் தங்க ஏற்கனவே செலவழித்து விட்டார். மனைவியும் மகனும் மீண்டும் இத்தாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடத்தல் மேதை சேபால கைதுசெய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டார். இதுவரை ஒரு மிகப் பெரிய நாயகனாகவே அவரது சுற்றத்தாரால் பார்க்கப்பட்டார்.

இந்தக்கட்டத்தில் இலங்கை அரசுக்கு சட்டச் சிக்கல் ஒன்று தோன்றியது. சேபாலவை எந்தச் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கலாம்? என்பதே அது.

ஏனெனில் சேபால இலங்கை சட்ட நியாயாதிக்க எல்லைக்குள் எந்தவிதக் குற்றத்தையும் செய்யவில்லை.

எல்லை தாண்டிய குற்றத்தையே செய்திருந்தார். எல்லை தாண்டிய குற்றத்துக்கு தண்டனை வழங்கும் ஏற்பாடுகள் இலங்கை தண்டனைக்கோவைகளில் இணைக்கப்படவில்லை. எனவே இந்த வகைக் குற்றத்தை விசாரிக்கத் தேவையான சட்டத்தை இயற்ற நாடாளுமன்றம் முடிவெடுத்தது.

ஒரு குற்றம் நிகழ்ந்த பின்(Ex post facto law) சட்டத்தினை இயற்ற நாடாளுமன்றத்திற்கு இருக்கும் அதிகாரத்தை கொண்டு இலங்கை அரசு உறுப்புரை 13(6) இன் பிரகாரம் இவ்வாறான விமானம் தொடர்பான குற்றங்களை விசாரிக்கவும், தண்டனை வழங்கவும் என விமானச் சட்டம் இல. 24 1982( Aircraft Act 24 of 1982) ஐ உருவாக்கியது. இந்தச் சட்டத்தின் மூலம் விசாரிக்கப்பட்ட சேபால விமானத்தை கடத்தியதற்காக மூன்று ஆண்டு சிறைத்தண்டனையும், பணத்தை கொள்ளை அடித்ததற்காக இரண்டு ஆண்டு தண்டனையும் மொத்தமாக ஐந்து ஆண்டுகள் தண்டனை பெற்றார். 1987 இல் விடுதலை பெற்ற சேபால தன் வாழ்நாளில் இத்தாலி பக்கம் தலை வைத்தே படுக்கமுடியவில்லை என்பதுதான் சோகம்.

# உணர்ந்தினைப்

○ இராகவன்

பாகம் 3

அப்ப தீபாவளிக் கார்ட்டுகள் மாவட்டபுரத்திலயிருந்த சீவம் இன்டஸ்றீஸ் நிறுவனத்தில தான் அச்சிடுறவை. ரண்டு ரூபாவிலையிருந்து இருவது ரூபா வரைக்கும் விப்பினம். அந்தக் காலத்தில இரண்டு ரூபாவே பெரியகாசு. கடையில தொங்கிற தீபாவளிக்கார்ட்டுகளில ஒண்டைவாங்கிறதுக்குப் 'பிளான்' பண்ணிக்கொண்டு போனால் அது இருக்காது. அதை ஆராவது ஒருத்தன் வாங்கிக்கொண்டு போயிருப்பான். பிறகு இருக்கிறதில ஏதாவதொண்டைத்தான் வாங்கிக்கொண்டு வரவேண்டியிருக்கும்.

ஒருக்கா பொலிஸ் ஆறுமுகம் கடையில சிவபெருமானும் உமாதேவியாரும் இருக்கிற தீபாவளிக் கார்ட் ஒண்டை வாங்கப் பிளான் பண்ணி அம்மாட்ட காசுகேட்டன். அப்ப அவவிட்டக் காசில்லை. நான் விடேல்ல ஒரே அரியண்டப்படுத்திக் கொண்டிருந்தன். "பொறடா! உவங்கள் பாண்டியர் வீட்டுப் பவுணணாக்கள் குழை வெட்டவாறன் எண்டவங்கள். அதிலை கொஞ்சக் காசுவரும் தாறன்!" எண்டு சொன்னா. அப்ப குழைவிக்கிறது ஒரு பிஸ்னஸ். எங்கட வீட்டை பன்னை, பாவட்டை, பூவரசு எண்டு கனக்கமரங்கள் காணிக்குள்ள நிண்டது. வரியாவரியம் அந்த மரங்களின்ர குழையள வண்டில் மாடு வைச்சிருக்கிறாக்கள் வந்து விலைக்குக் கேப்பினம். ஆர் முதல்ல வந்து கேக்கினமோ அவைக்குத்தான் விலைக்குக் குடுக்கிறது வழக்கம். அந்தவரியம் பாண்டியர் வீட்டுப் பவுணன் எண்ட வண்டில் மாடு வைச்சிருக்கிறாள் வந்து குழையை விலைக்குக் கேட்டார். அம்மாவுங் குடுத்திட்டா. அம்மா என்னிட்டச்சொன்னமாதிரியே அவையள் வந்து குழையளை அண்டைக்கு வெட்டிப் பிடிபிடியாய் வண்டில்ல ஏத்திப்போட்டு காசுகுடுத்திட்டுப் போட்டினம். அந்தக்காசில ஒரு இரண்டு ரூபாக்குத்திய அம்மா என்னிட்டத் தந்தா. நான் ஒரேயோட்டமா ஓடிப்போய் பொலிஸ் ஆறுமுகங்கடையில அந்தத் தீபாவளிக்கார்ட்டை வாங்கியந்திட்டன். அதில எனக்கு நல்ல சந்தோசம்.

07

இந்த இடத்தில குழைவெட்டைப் பற்றிக் கொஞ்சம் சொல்லோணும். குழைவெட்டுறாக்கள் முதல்ல குழையளை வெட்டிக் குவிச்சுப் போட்டு பிறகு பிடிபிடியாக் கட்டுவினம். எத்தினை பிடிவருகுதோ அதுக்கேற்ற மாதிரி ஒருபிடிக்கு இவ்வளவு காசு எண்டு கணக்குப் பாத்துக் காசு தருவினம். பிறகு அதை வண்டில்ல ஏத்திக்கொண்டு போய் தோட்டம் வயல்செய்யிறாக்களுக்கு விப்பினம். அவையள் அதை வாங்கி தங்கடை விளைநிலத்தில போட்டுத்தாட்டுப் பசளையாக்கித் தோட்டம் செய்வினம். இதைத்தான் பசுந்தாட் பசளை எண்டு சொல்லுறது. இப்ப இந்த நடைமுறையெல்லாம் அருகி வழக்கொழிஞ்சுபோச்சு. எல்லாம் காலத்தின்ர கோலம். ம்... சரி இப்ப நாங்கள் விசயத்துக்கு வருவம்.

எங்கட ஊரில தீபாவளிக்கார்ட் விக்கிற இன்னொரு கடை நாதண்ணையின்ர கடை எண்டு போன கிழமை சொன்னனான். அங்கை பின்னணியில சின்னச் சின்னத் தீபங்கள் மிதக்க நடுவில பிள்ளையார் இருபுறமும் இலக்குமி, சரஸ்வதி இருக்கிற மாதிரியான தீபாவளிக்கார்ட்தான் கூடுதலா விக்கிறது. நாதண்ணையின்ர கடையில தீபாவளிக்கார்ட் வாங்கப்போகேக்குள்ள அவரின்ரை மனிசிக்காரி யமுனாக்கா நிண்டால் தாமதிக்காமல் உடன வாங்கிக்கொண்டு வந்திடலாம். ஆனால் நாதண்ணை கடையில நிண்டார் எண்டால் கதை முடிஞ்சுது. இரண்டு அல்லது ஒரு ரூவாக்கார்ட் வாங்கப் பத்து ரூபா கொண்டுபோனால் மிச்சக்காசு தரேக்குள்ள நாலைஞ்சு தரம் எண்ணிப்போட்டுத்தருவார். பிறகு காசைத்தந்திட்டு "இஞ்சை ஒருக்காத்தா" எண்டு பறிச்சுத் திருப்பி நாலைஞ்சுதரம் எண்ணுவார். பிறகு தருவார். தந்திட்டுப் பிறகுமொருக்கால் பறிச்சுத்திருப்பி எண்ணிப் போட்டுத்தருவார். அதோட நான் ஓடியந்திடுவன் .

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் நாள் 2024...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

தும் ஒலிக்கவிடப்பட்டன. உட்கிராமங்களில் மக்கள் கூடும் இடங்களிலும் பாடல்களைக் கேட்கக் கூடியதாக இருந்தது. அடை மழை பொழிந்தது. வெள்ளம் பெருகி சில இடங்களில் பாதைகளை மூடியது. புயல் வரக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டது. எனினும் மழை விட்டிருந்த இடையூட்டுக்குள் மக்கள் துயிலுமில்லங்களை நோக்கிக் குவிந்தார்கள். குடைகளின் கீழே சுடர்களை ஏற்றினார்கள். ஆம். அவர்கள் தமது தேசக் கனவைக் கட்டியெழுப்பப் புறப்பட்டவர்களை ஒரு தேசமாக நினைவு கூர்ந்தார்கள்.

"அதிகாரத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் என்பது மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம்தான்" என்று மிலன் குந்ரோ Milan Kundera கூறுவார். நினைவுகளின் போராட்டம் அல்லது மறதிக்கு எதிரான போராட்டம் என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசமாகத் திரள்வதன் ஒரு பகுதி. நீதிக்கான போராட்டத்தின் ஒரு பகுதி.

தமிழ் மக்கள் எதை, எதை மறக்கவில்லை? அல்லது மறக்கக் கூடாது?

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தங்களைத் தியாகம் செய்தவர்களை மறக்கக்கூடாது. அதேசமயம் அந்த தியாகியின் இழப்பால் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர்களையும் மறந்துவிடாதிருக்கவேண்டும். தியாகிகளின் வீட்டில் அடுப்பு எரிகின்றதா? அந்தத் தியாகியின் வீட்டுக்கூரை மழைக்கு ஒழுகுகின்றதா? அந்தத் தியாகியின் முதிய பெற்றோர் இப்பொழுது யாரோடு இருக்கிறார்கள்? அவர்களை யார் பராமரிக்கிறார்கள்? அந்தத் தியாகியின் மனைவி இப்பொழுது எங்கே? அவருடைய வருமான வழி என்ன? அந்தத் தியாகியின் பிள்ளைகள் ஒழுங்காகப் படிக்கிறார்களா? என்பன போன்ற எல்லா விடயங்களையும் மறந்துவிடாமல் கவனிக்க வேண்டும்.

இரண்டாவதாக, அந்தத் தியாகியோடு போர்க்களத்தில் நின்றவர்கள், கையைக் காலைக் கொடுத்தவர்கள், கண்ணைக் கொடுத்தவர்கள், இடுப்புக்குக் கீழ் இயங்காதவர்கள்,சக்கர நாற்காலிகளில் வாழ்பவர்கள்,இப்பொழுதும் படுக்கையில் கிடப்பவர்கள், இப்பொழுதும் உடல் முழுவதும் சன்னங்களைக் காவிக்கொண்டு திரிபவர்கள், என்னவென்று தெரியாத நோய்களைக் காவிக்கொண்டு திரிபவர்கள்... என்று முன்னாள் இயக்கத்தவர்களையும் மறக்கக்கூடாது. இந்த நாட்டிலேயே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய தரப்பு (most vulnerable) அவர்கள்தான். அவர்களில் சிலர் கடந்த 15 ஆண்டுகளாக தேர்தலில் போட்டியிடுகின்றனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆறு பேர் வெவ்வேறு கட்சிகளில் தேர்தலில் போட்டியிட்டனர். ஒருவரும் வெற்றி பெறவில்லை. காலை இழந்த பெண்ணுக்கு கூட வெற்றி கிடைக்கவில்லை.

அந்த முன்னாள் இயக்கத்தவர்களில் யாருக்குமே தமிழ் மக்கள் வெற்றியைக் கொடுக்கவில்லை. ஏன்? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட இயக்கம் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று தமிழ் மக்கள் நம்புகிறார்களா? அல்லது, இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கு மறதி அதிகமா? அல்லது முன்னாள் இயக்கத்தவர்கள் தேர்தல் அரசியலின் கள்ளச் சூத்திரங்களைக் கற்றுத் தேறவில்லையா? ஒவ்வொரு ஆண்டும் துயிலும் இல்லங்களில் சிந்தப்படும் கண்ணீர் யாருக்கு வாக்காக மாறுகிறது?

தியாகிகளை நினைவு கூர்வது என்பது, அந்தத் தியாகிகளோடு போர்க்களத்தில் நின்றவர்களை, போராட்டத்தில் தமது இளமையை, தமது வயதுகளை, தமது கல்வியை, அவயவங்களை இழந்தவர்களையும் மறந்து விடாமல் இருப்பதுதான்.

மூன்றாவது,போராடப்போய் சிறை வைக்கப்பட்டவர்களை, காணாமல் ஆக்கப்பட்டவர்களை, அவர்களுக்காகப் போராடும் முதிய அம்மாக்கள் அப்பாக்களை, போரினால் விதவைகளாக்கப்பட்டவர்களை மறந்துவிடாதிருக்கவேண்டும். போர் விதவைகள் கிட்டத்தட்ட 90,000பேர் உண்டு. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது போரினால் யார் யாருடைய தனிப்பட்ட வாழ்க்கை தூர்ந்துபோனதோ,யாரெல்லாம் மீண்டெழ முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடைய வாழ்க்கையை, வாழ வேண்டும் என்ற நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதுந்தான். நாலாவது, 2009ஐ உடனடுத்த ஆண்டுகளில் நினைவு நாட்களை ஒழுங்குபடுத்தியது அரசியல் கட்சிகள்தான். அவர்களால்தான் அப்பொழுது அதைத் துணிந்து செய்ய முடிந்தது. இப்பொழுதும் நினைவு கூரும் களங்களின் பின்னால் கட்சிகள் உண்டு. நினைவிடங்களில் கூடும் மக்களின் கூட்டுத் துக்கத்தை கொத்து வாக்காக எப்படித் திரட்டுவது என்பது அவர்களுடைய பிரச்சினை. ஆனாலும் மறதிக்கு எதிரான போராட்டத்தில் அவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. அதே சமயம் அவர்களுடைய அரசியல் முதலீடும் தமிழ் மகாஜனங்களின் மறதி தான்.

2009 க்கு முன்பு தமிழ்த்தேசிய அரசியலில் ஈடுபடுவதற்கான அடிப்படைத் தகுதி தியாகத்துக்குத் தயாராக இருப்பது தான். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக அடிப்படைத் தகுதி , பிழைக்கத் தெரிந்திருப்பது. இந்தத் தகைமை வேறுபாட்டுக்குப் பின்னால் உள்ள சீரழிவை தமிழ் மக்கள் மறந்து விடாமல் இருக்க வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ் மக்களின் நினைவும் தேவை; மறதியும் தேவை.


தமிழ் மக்களின் மறதியின் மீது அதிகம் வெற்றிகரமாக அரசியல் செய்வது தமிழரசுக் கட்சிதான். கடந்த 15 ஆண்டுகளாக தலைவராக இருந்த சம்பந்தர் ஒவ்வொரு பெருநாள் திருநாளின் போதும் குடுகுடுப்பைச் சாத்திரக்காரனைப்போல அல்லது சுயாதீன திருச்சபையின் போதகரைப்போல அருள் வாக்குக் கூறிக்கொண்டிருந்தார். தீபாவளிக்கு தீர்வு வந்துவிடும் என்றெல்லாம் கூறினார். எதுவும் வரவில்லை. சம்பந்தரும் இப்பொழுது இல்லை. ஆனால் தமிழ் மக்கள் அதையெல்லாம் மறந்துபோய் இந்த முறை தமிழரசுக் கட்சிக்கே கணிசமான வாக்குகளைக் கொடுத்தார்கள்.

தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் மறதியை வைத்து விளையாடுகிறது என்பதனை எப்பொழுதும் சுட்டிக்காட்டுவது, பிரதானமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களின் மறதிக்கு எதிரான போராட்டத்தில் முன்னணியில் நிற்பது அந்தக் கட்சிதான். அதே சமயம் அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஏகபோக வாரிசாக தன்னைக் காட்டிக்கொள்ளப் பார்க்கின்றது. நினைவு நாட்களைத் தத்தெடுக்கப் பார்க்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது அந்தக் கட்சியின் செயலாளர் கஜேந்திரன் ஒரு காணொலியில் கூறுகிறார் '....ஏனைய எல்லாக் கட்சிகளை விடவும் சாகத் தயாரான கட்சி தாங்கள்தான்' என்று. ஒரு கட்சி தனது மக்களுக்காக சாகத் தயாராக இருக்கிறது என்பதனை யாராவது அந்தக் கட்சியின் உறுப்பினர் செத்துத்தான் நிரூபிக்கவேண்டும். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்காகப் போராடி யாரும் அப்படி உயிரைத் துறந்ததாகத் தெரியவில்லை. தன்னை ஏனைய கட்சிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக, தான் மட்டும் சாகத் தயாரான கட்சி என்று முன்னணி கூறிக்கொள்கிறது. ஆனால் 3லட்சத்துக்கும் குறையாத போராளிகளும் மக்களும் உயிரைக் கொடுத்த ஒரு போராட்டத்தை கடந்து வந்த இனம் இது என்பதை அந்தக் கட்சி மறந்துவிட்டது. இதுவும் தமிழ் மக்களின் மறதியின் மீது செய்யப்படும் அரசியலே.

இவ்வாறு தமிழ் மக்களின் மறதியின் மீது அரசியல் செய்யும் தமிழ்த் தேசியக் கட்சிகள், நினைவு நாட்களை வைத்துச் சூதாடுவதைத் தடுப்பதற்கு தமிழ் மக்கள் மறதிக்கு எதிராகப் போராட வேண்டும். எனவே மறதிக்கு எதிரான நினைவுகளின் போராட்டம் என்பது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை தேசத்தைக் கட்டியெழுப்பிய நினைவுகளைத் தொடர்ந்தும் தேசத்தை பிணைக்கும் நினைவுகளாகப் பேணுவதுதான். நினைவின் பசை கொண்டு ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவது.

மேலும், இறந்த காலத்தை மறந்து விடாமல் இருப்பது என்பது, இறந்த காலத்திலேயே வாழ்வது அல்ல. காயங்களோடு வாழ்வது அல்ல. துக்கத்தில் உறைந்து கிடப்பதும் அல்ல. மாறாக, இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்வது. மகத்தான வீரமும் மகத்தான தியாகமும் எங்கே எப்படித் தோல்வியுற்றன என்பதைக் கற்றுக்கொள்வது. கூட்டுத் துக்கத்தை, கூட்டுக் காயங்களை, கூட்டு மனவடுக்களை, கூட்டுத் தோல்வியை, கூட்டு அவமானத்தை கூட்டு அரசியல் ஆக்க சக்தியாக மாற்றுவது. அந்த அரசியல் ஆக்க சக்தியை நீதிக்கான போராட்டத்தின் உந்து விசையாக மாற்றுவது. ■





# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்


இலங்கை சுதந்திரமடைந்ததும் சேர். ஜோன் கொத்தலாவலையின் ஆட்சியில் பதவியா, மதவாச்சி, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டன.

இதனை அவதானித்த சுந்தரலிங்கம், சிங்கள ஆட்சியாளர்களின் அடுத்த தெரிவு வன்னியாகத்தான் இருக்குமென்பதை உணர்ந்து கொண்டார்.

வன்னியில் இடம்பெறவிருந்த சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தியவர் சுந்தரலிங்கம் தான் என்றால் மிகையாகாது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவிட்டு நாடு திரும்பி சுந்தரலிங்கத்திடம் சிறிது காலம் பயிற்சி பெற்ற பின்னர் இலங்கை நிர்வாகசேவையில் இணைந்து கொண்ட மாணிக்க இடைக்காடரை (பேராசிரியர் கைலாசபதியின் மருமகன்) வவுனியா அரசாங்க அதிபராக வருமாறும் தான் இடமாற்றம் எடுத்துத் தருவதாகவும் கூறினார் சுந்தரலிங்கம் . மாணிக்க இடைக்காடரும் சம்மதித்தார்.

7

டொலர் பாம், கென் பாம் உட்பட வன்னியிலுள்ள ஆற்றங்கரையோரக் குடியிருப்புகள் யாவும் சுந்தரலிங்கத்தால் உருவாக்கப்பட்டவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
சிறுகதை

# நவரத்தினம் அண்ணரின் நவராத்திரிப் பூசை

மாகியம்பிட்டி ஆனந்தன்

"அடி! அடி!" என சைக்கிளில் வந்துகொண்டிருந்த சுந்தரம் மாஸ்டர் அவலக்குரல் எழுப்பியவாறு தமது இரண்டு கால்களையும் தூக்கி சைக்கிள் 'பாரில் 'வைத்துக் கொண்டார். பயத்தில் ரோமங்கள் எல்லாம் குத்திட்டு நின்றன. தாறுமாறாக ஓடிய சைக்கிள் வேலிக்குள் விழாமல் போனதே பெரிய காரியம். "எத்தனையோ பேர் இந்த ஒழுங்கையால போகினம், வருகினம். அவையள் எல்லாரையும் விட்டிட்டு சனியன் பிடிச்ச நாய் எப்பபாத்தாலும் என்னைத்தான் துரத்துது. என்னிலை மாத்திரம் இந்தத் தரித்திரத்துக்கு ஏன் அவ்வளவு ஆத்திரம்? ஒருவேளை போன பிறப்பில என்ர பெண்சாதியாய் இருந்திருக்குமோ?" என நாயைப் படு கெட்ட வார்த்தைகளால் திட்டியவாறு ஒரு வழியாக ஒழுங்கையிலிருந்து ரோட்டுக்கு வந்தேறினார் சுந்தரம் மாஸ்டர்.

"மாஸ்டர் ஒரு அலுவல்" என ஒரு குரல் சுந்தரம் மாஸ்டரை இடைமறித்தது. சட்டென்று சைக்கிளிலிருந்து கீழே குதித்தவர் "ஆரப்பா என்னை மறிக்கிறது?" எனக் கண்களைச் சுருக்கிக் கூர்ந்து பார்த்தபடி கேட்டார் . "என்னைத் தெரியேல்லையே மாஸ்டர்? நான் தான் நவரத்தினம்" என்றார் அவரை இடைமறித்தவர். "அட நவரத்தினமே? ஆளையே அடையாளம் காணாமல் கிடக்கு. இண்டைக்கு குளிச்சு உடுப்பும் மாத்தியிருக்காய் போல" என கொஞ்சமும் இரக்கமில்லாமல் கேட்டார் மாஸ்டர். "இண்டைக்கு நவராத்திரி கடைசிப் பூசையெல்லோ? கடையில செய்யிறம் வந்திட்டுப் போங்கோ" என்றார் நவரத்தினம் அண்ணர். தனிக்கட்டையான சுந்தரம் மாஸ்டர் வீட்டில் நவராத்திரிப் பூசை செய்யமாட்டார் என்பது நவரத்தினம் அண்ணருக்குத் தெரியும்.

சைக்கிளை மதிலோடு விட்டுப் பூட்டிவிட்டு,நவரத்தினம் அண்ணரின் சைக்கிள் கடைக்கு வந்த மாஸ்டர் பெரும் வியப்புக்குள்ளானார். எப்பவுமே கரிபத்தி இருண்டு காணப்படும் அந்தக்கடை நன்கு கழுவப்பட்டு பளிச்சென்று காணப்பட்டது. மாவிலை தோரணங்கள் தொங்கவிடப்பட்டு மங்களகரமாகக் காட்சியளித்தது. ஊதுபத்தி வாசம் கமகமத்துக்கொண்டிருந்தது. சுவாமிப் படத்தட்டில் எந்தெந்தத் தெய்வங்களின் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று எந்தப் புலனாய்வுத் துறையாலும் கண்டுபிடிக்கமுடியாதவாறு இந்நாள் வரை புழுதியும், தூசியும் படிந்து காணப்பட்ட படங்கள் நன்றாகக் கழுவப்பட்டு தெய்வங்களுக்கு விடுதலையளிக்கப்பட்டு மாலைகளும் போடப்பட்டிருந்தன.

கடைக்கு வெளியே போடப்பட்டிருந்த ஒரு வாங்கிலும் சில கதிரைகளிலும் தற்காலிக பக்த சிரோன்மணிகள் சிலர் எண்ணெய் வழியும் முகத்தோடு வீற்றிருந்தார்கள். "தள்ளியிரு சின்னத்தம்பி" என வாங்கில் உட்காந்திருந்த சின்னத்தம்பியைச் சற்று நகர்ந்திருக்குமாறு சொல்லிவிட்டு அவனருகில் அமர்ந்துகொண்டார் மாஸ்டர். சின்னத்தம்பி இந்த உலகத்திலேயே இல்லை. தலையை உயர்த்துவதும் பின் தொப்பென்று கீழே போடுவதுமாக இருந்தான். மூளை என்ற பிரதான கட்டுப்பாட்டு மையத்தின் செயற்பாட்டை அவனது வயிற்றுக்குள் போன சாராயமானது குழப்பிவிட்டிருந்ததால் அவனது தலையானது கட்டுப்பாட்டையிழந்து அல்லாடிக் கொண்டிருந்தது. சாராய நாத்தம் தாங்கமுடியாமல் சுந்தரம் மாஸ்டர் முகத்தைச் சுழித்து மூக்கைப் பொத்திக் கொண்டார்.

தலை வாழையிலைகளைக் கழுவி வாங்கில் பரப்பி அவற்றில் புக்கை, அவல், சுண்டல் என்பவற்றைப் படைத்தபின், பழ வகைகளையும் சுற்றிவர வைத்தார் நவரத்தினம். திருநீற்றுத் தட்டில் திருநீற்றைக் கொட்டி சில கற்பூரக் கட்டிகளை அதன்மேல் வைத்து தீக்குச்சியை உரசி பற்றவைத்துக் கொண்டார். "ஆரெண்டாலும் தேவாரம் பாடுங்கோ" என கதிரையில் அமர்ந்திருந்த கனகர் குரல் கொடுத்தார். அங்கே இருந்த மகா பண்டிதர்கள் எல்லாம் கனகர் சொல்வதற்கும் தமக்கும் ஒரு சம்பந்தமும் இல்லையென்பது போல எங்கோ பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். மாஸ்டர் தாமே தேவாரம் பாடுவோம் என முடிவுசெய்துகொண்டு எழவிருந்தபோது "பேந்தென்ன இங்க நவரத்தினத்தின்ரை மேன் தனுசனே வந்திட்டான் அவன் பாடுவான்" என்றார் நடராசா. அப்போதுதான் அங்கே வந்துசேர்ந்த தனுசன் ஏன்டா இந்த நேரத்தில வந்தோமென நினைத்து முழித்தான். தனுசனோ அங்கேயிருந்த பண்டிதர்களுக்கெல்லாம் தலைமை தாங்கக்கூடிய மகாவித்துவான். இவன் பள்ளிக்கூடம் போவதே தன் வகுப்பில் படிக்கும் சக மாணவர்களின் படிப்பைக் குழப்புவதற்கும், சண்டை மூட்டி விடவும் தான். அவனைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் துரத்தாமல் விட்டிருப்பதே பெரிய அதிசயம்.

"தம்பி ஒரு தேவாரம் பாடு ராசா" என நடராசா மீண்டும் சொன்னார்.

"ஐயா... நான்... தான்...." என்று தனுசன் இழுக்கவே

"வெட்கப்படாமல் பாடு தம்பி கொப்பற்றை கடையில நீ பாடாமல் வேற யார் பாடுறது? " என்றார் துரையர்.

சற்றுத் துணிவு வரப்பெற்ற தனுசன் செயலில் இறங்கினான்.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரக்கசைத்து... அரைக்கசைத்து..... " என்று தொடங்கி கொஞ்சம் தயங்கினான். "கூச்சப்படாமல் பாடு தம்பி" என ஊக்கம் கொடுத்தார் நடராசர்.

"ஏடுடைய மலரான் முனை நான் போற்ற அருள் செய்த கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே..." என மிகுதியைப் பாடினான். சம்பந்தரையும் சுந்தரரையும் அப்பரையும் ஒரு தேவாரத்தின் மூலம் சமரசம் செய்து வைத்தபின் அரகரமகாதேவா என்று சொல்லிக் கொண்டான். அங்கிருந்தவர்களுக்குத் தனுசன் ஒரு சினிமாப் பாட்டைப் பாடி அரகரமகாதேவா என்று சொன்னால் கூட அதைப் பற்றிக் கவலைப்படும் நிலையில் இல்லை. பரமசிவன் தனது நெற்றிக் கண்ணைத் திறந்து தனுசனை சாம்பலாக்காமல் விட்டதுக்கு நவரத்தினம் அண்ணரின் புத்திர பாக்கியம் மிகவும் பலமாகவிருந்தமைதான் காரணம் போலும். சுந்தரம் மாஸ்டருக்கோ தலையைச் சுவரில் மோதித் தற்கொலை செய்யவேணும் போலவிருந்தது. ஒருவேளை தனுசன் சகலகலாவல்லிமாலை பாடத் தொடங்கியிருந்தால் நிச்சயம் அப்படிச் செய்துதான் இருப்பார். "நவரத்தினம் தான் படிக்காட்டியும் தன்ரை மேனை எண்டாலும் படிப்பிக்கிறான். எவ்வளவு நல்ல காரியம். படிப்பின்ரை அருமை இப்படியான வேளைகளிலதான் தெரியுது" என்று பாராட்டுப்பத்திரம் வழங்கினார் அங்கிருந்த சின்னையா அண்ணர்.

எல்லோரும் கற்பூர தீபத்தை கைகளால் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். தலை தூக்கமுடியாமல் வெறியிலிருந்த சின்னத்தம்பி அவிழ்ந்து கீழே விழத் தயாராகிக் கொண்டிருந்த சாரத்தை ஒரு கையால் பிடித்திருந்தபடி ஒரு கையால் மாத்திரம் தீபத்தை கையால தொட்டு கண்ணில ஒற்றி தன் பக்தி விசுவாசத்தைக் காட்டிக்கொண்டார்.

எல்லோரும் திருநீறு பூசி சந்தணப் பொட்டும் வைத்துக்கொண்டார்கள். சின்னத்தம்பி எழும்ப முடியாத கட்டத்தை அடைந்ததால் எல்லாவற்றையும் குறைக்கண்களால் பார்த்தபடியிருந்தான். நவரத்தினம் அண்ணர் வாழையிலைத் துண்டுகளில் புக்கை, அவல், சுண்டல், வாழைப்பழம் ஆகியவற்றை வைத்து எல்லோருக்கும் வழங்க எல்லோரும் சாப்பிடத் தொடங்கினார்கள். சுந்தரம் மாஸ்டரும் சுண்டலில் கொஞ்சம் கிள்ளி வாயில் போட்டார். வாய்க்குள் ஏதோ உறுத்துவதுபோல் இருந்தது. வாய்க்குள் விரலை விட்டு உறுத்திய பொருளை வெளியே எடுத்தவர் அதிர்ந்து போனார். விரலோடு ஒரு மீன் முள்ளு வந்தது. சுண்டலை மணந்து பார்த்தார். மீன் வெடுக்கு குமட்டிக்கொண்டு வந்தது. தன் உணர்ச்சிகளை வெளிக்காட்டாதவராக " நவரத்தினம் நீயே சுண்டல் அவிச்சனீ? " எனக் கேட்டார்.

"இல்லை மாஸ்டர் மணியம் கடையில் சொல்லி எடுப்பித்தனான் ஏன் கேக்குறியள்? "என்றார்.

"சுண்டல் நல்ல பதமாயிருக்கு அதுதான்கேட்டனான்" என மனச்சாட்சிக்கு விரோதமாய் மனமறிந்து பொய் சொன்னார் மாஸ்டர். மணியம் கடை மாமிசச் சாப்பாட்டுக்கடை என்பது மாஸ்டருக்குத் தெரியும். மீன் பொரிச்ச எண்ணையில சுண்டலையும் போட்டு மணியம் விளையாடியிருக்கிறார் என்பது புரிந்தது. மற்றவர்களைப் பார்த்தார். அவர்களோ வெகு ஆனந்தமாக சுண்டலை வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தார்கள். என்ன செய்வது என்று திண்டாடியவருக்கு ஒரு யோசனை பொறிதட்டியது. பிரசாதத்தை வாழையிலையோடு சுற்றியவர் சொப்பிங் பை ஒன்றை எடுத்து அதற்குள் போட்டுக்கெண்டார். இதனைக் கவனித்த நவரத்தினம் அண்ணர்

"ஏன் மாஸ்டர் சாப்பிடாமல் சுத்திறியள்? ஏன் பிடிக்கேல்லையோ?" எனக் கேட்கவும்,

"அப்பிடியில்லை நவரத்தினம் வீட்டை கொண்டுபோய் தேத்தண்ணியோட சாப்பிடலாமெண்டுதான்.." என சமயோசிதமாகப் பதில் கூறிக்கொண்டார் மாஸ்டர். "அப்பிடியெண்டால் இன்னும் கொஞ்சச் சுண்டல் தரட்டோ?" என நவரத்தினம் கேட்க "வேண்டாம் நவரத்தினம் இது திருப்தியாக் காணும்" எனக் கூறிக்கொண்டு சைக்கிளில் ஏறி வீடுநோக்கிப் போகலானார் மாஸ்டர். ரோட்டிலிருந்து ஒழுங்கைக்குத் திரும்பினார். வழக்கம்போல மங்கல வாத்தியங்களோடு வரவேற்றது அந்த நாய். மூக்கைத் தூக்கி விரித்து பல்லை விகாரமாய் கிழித்தபடி இவரை நோக்கி அது ஓடி வந்தது.

சட்டென்று சைக்கிளிலிருந்து வேட்டி காலில் இடறுப்பட்டுக் கீழே குதித்தவர் அவசர அவசரமாக சொப்பிங் பையிலிருந்த பிரசாதத்தை எடுத்து ஒழுங்கை ஓரமாக வைத்தார். நாயின் ஆக்ரோசம், கோபம் போன இடம் தெரியவில்லை. ஆனந்தத்தோடு வாலையாட்டியபடி அது சாப்பிடத் தொடங்கியது. தனது உபாயம் பலித்தது என்ற சந்தோசத்தோடு சைக்கிளில் தாவி ஏறினார்.

நவராத்திரி பூசை செய்ததால் நவரத்தினம் அண்ணருக்கு நல்ல வரம் கிடைத்ததோ என்னவோ ஆனால் அவர் செய்த நவராத்திரிப் பூசையால் சுந்தரம் மாஸ்டருக்கு நல்ல பலன் கிடைத்தது. இனி அவர் அந்த ஒழுங்கையால் ஆனந்தமாய் பவனிவருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
01 டிசெம்பர் 2024



**கீதப்பிரியன்**
தரம் - 8B
யாழ்ப்பாணம்
மத்திய கல்லூரி




**கி.அனுராங்கன்**
தரம் - 6
யா/கோண்டாவில்
இராமகிருஸ்ண மகா
வித்தியாலயம்



**ரி.டனுஷ்கா**
தரம் - 6B
யா/உடுவில் மகளிர்
கல்லூரி



**K.புவீர்சன்**
தரம் - 8E
யா/ இந்துக் கல்லூரி




**அ.அமெலியா**
தரம் - 11C
யா/உடுவில்
மகளிர்

**அ.மிதுசிகன்,**
தரம் - 5
யா/மானிப்பாய் சோதிவேம்படி
வித்தியாசாலை



**ப.பருஷயன்,**
தரம் - 8H
யாழ்ப்பாணம்
இந்துக் கல்லூரி





**J.அக்ஷயா,**
தரம் - 9
யா/ சுண்டுக்குழி மகளிர்
கல்லூரி.



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0773165555**




## நிரப்புவோம்

7 - 2 = ◯

5 - 3 = ◯

9 - 7 = ◯

9 - 4 = ◯

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org